**TNEB**
**எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் நியூஸ்**

மலர்- 8 ✧ இதழ்-4 ✧ நவம்பர் 2025

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**V. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**

இணைச்செயலாளர்

**K. தயாநிதி**

தலைமை அலுவலக முகவரி :
TNEB எம்ப்ளாயீஸ்
பெடரேஷன்
(அங்கீகாரம் பெற்றது)
39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org

## திரண்டெழுவோம்! தொழிலாளர் விரோதப் போக்கை முறியடிப்போம்!

**28.10.2025**ல் தமிழகம் முழுவதும் மின்சார வாரியத்தின் அனைத்து பகுதி மேற்பார்வை பொறியாளர் அலுவலக வாயில் முன்னர் பிரதான கோரிக்கைகளை வலியுறுத்தி கோரிக்கை முழக்கமும் கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தியுள்ளோம்.

கன மழை பெய்திருந்த நிலையிலும் சென்னையில் அனைத்து மின்வட்டங்களும் மழையில் நனைந்து கொண்டே தோழர்கள் கோரிக்கைகளை முழக்கமிட்டுள்ளார்கள்.

தமிழகம் முழுவதும் மின்வட்டங்களில் தொழிலாளர்கள் பெருமளவில் கலந்து கொண்ட கோரிக்கை ஆர்ப்பாட்டத்தை சிறப்பித்துள்ளனர். நாளிதழ்களும், ஊடகங்களும் செய்திகளை வெளியிட்டு தமிழக அரசுக்கும், மின்சார வாரியத்திற்கும் நமது கோரிக்கைகளை கொண்டு சென்றிருக்கிறார்கள்.

ஊதிய உயர்வு வேலைபகிர்வு மற்றும் இதர கோரிக்கைகள் குறித்து அசைவற்ற நிலையில் உள்ளதால் நாம் ஏற்கனவே திட்டமிட்டபடி நவம்பர் 15 அன்று காலை சென்னை மின்சார வாரிய தலைமை அலுவலகம் அருகே கோரிக்கைகளை வலியுறுத்தி தர்ணாவில் ஈடுபட உள்ளோம். இதன் பின்னராவது வாரியமும் அரசும் கோரிக்கைகளின் நியாயத்தை புரிந்திட முன்வருமா என பார்ப்போம்.

தமிழகத்தில் பெண்கள் ஆபத்தான பணிகளில் பணி செய்திட வேண்டுமென்று மிகவும் இரகசியமாக உத்தரவிட்டு அரசுப் பதிவிதழில் வந்துள்ளதை நாளிதழ்கள் மூலமாக அறிந்த பின்னர் தமிழகத்தில் உள்ள அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கூடி பேசி தமிழக அரசுக்கு அனைவரும் கையொப்பமிட்டு மேற்கண்ட உத்தரவை கைவிடக் கோரி கூட்டு மனுவாக சமர்ப்பித்துள்ளோம்.

எதிர்வரும் 29ம் தேதி உழைக்கும் பெண்கள் அனைவரும் என்று திரண்டு மாவட்ட மையங்களில் போராட உள்ளார்கள்.

மக்களைப் பாதுகாப்போம், நாட்டை பாதுகாப்போம் நாடு தழுவிய போராட்டம் நவம்பர் 26ல் நடைபெற உள்ளது. அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் விவசாயிகள் முன்னணியினரும் இதற்கான திட்டமிடலில் ஈடுபட்டு போராட்டத்தை வெற்றிகரமாக்க உள்ளார்கள்.

நவம்பர் 29ம் தேதி நடைபெற உள்ள உழைக்கும் பெண்கள் போராட்டத்திலும், நவம்பர் 26ல் உள்ள அனைத்து மத்திய தொழிற்சங்க மற்றும் விவசாயிகள் முன்னணியினர் நடத்தும் போராட்டத்திலும் UTUC சார்பில் பெருமளவில் கலந்து கொள்வோம்.

SIR வாக்கு சீட்டு சீர்திருத்தம் என்று தமிழகத்தின் வாக்காளர்களின் வாக்குரிமையை குறிப்பிட்ட அளவு பறித்திடும் நோக்கில் அவசரகதியில் ஒன்றிய அரசின் கட்டளையில் பணிகள் நடந்து கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் இந்திய கூட்டணி உள்ள அரசியல் கட்சிகள் எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதை அறிகிறோம். வாக்குரிமை பாதுகாத்து கொள்ள வேண்டிய கடமை நம் எல்லோருக்கும் உள்ளது. மத்தியில் இந்திய கூட்டணியில் உள்ள RSP கட்சியையும் தமிழகத்தில் இந்திய அரசியல் கூட்டணி கூடி பேசியதில் அழைத்திருக்க வேண்டும்.

கடந்த 03.11.2025ல் NCCOEEE நிர்வாகிகள் கூட்டம் மும்பையில் நடைபெற்றதில் மின்சட்ட திருத்த மசோதா 2025ஐ பலமாக எதிர்க்கும் போக்கில் மாநில அளவிலும், தேசிய அளவிலும் போராட்டங்கள் நடைபெற உள்ளது.

2026 ஜனவரி 30ல் தேசம் தழுவிய பேரணி புது தில்லியில் நடைபெற உள்ளது. இடைப்பட்ட காலங்களில் மண்டல, மாநில மாநாடுகள் நடத்துவதும் அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து மின்சார சட்ட திருத்த மசோதா 2025ஐ எதிர்ப்பது என்றும் இதற்கான மாநில மாநாடுகள் நடத்துவது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளதின் அடிப்படையில் தமிழக மின்வாரியத்தின் அனைத்து மண்டலங்களிலும் தமிழ்நாடு NCCOEEEன் ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில் டிசம்பர் 2025 மற்றும் ஜனவரி 2026 மாதங்களில் மண்டல மாநாடுகள் நடைபெற உள்ளதில் மின்தொழிலாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஒன்றிய அரசின் மின்சார சட்டதிருத்த மசோதா 2025ஐ எதிர்ப்போம். தனியார் மயத்தை விரட்டியடிப்போம். மக்களை பாதுகாப்போம், மின்தொழிலைப் பாதுகாப்போம்.

மத்திய அரசின் தொழிலாளருக்கு பயனில்லாத, தொழிலுக்கு பயனில்லாத கொள்கையான மனுதர்மத்தை தழுவி குலத்தொழிலுக்கு செல்ல வைக்கும் பிற்போக்குத்தனம் கொண்ட ஷ்ரம் சக்தி நிதி 2025ஐ எதிர்ப்போம்.

**– ஆசிரியர்**

Date: 5th November 2025

To

**Shri Manish Mishra Ji,**
Director (R&R-I)
Ministry of Power
Government of India
New Delhi – 110 001

**Hon'ble Sir**

We, on behalf of (Name of the Union) a constituent union of TNEBEF Name of Federation) and the National Coordination Committee of Electricity Employees and Engineers (NCCOEEE), which is the conglomeration of major power sector national federations of our country, want to register our firm opposition to the Draft Electricity (Amendment) Bill, 2025, released vide letter No. 426/2011-R&R (Vol.-IX) dated 14 October 2025. We demand the unconditional withdrawal of this draft.

The Explanatory Note presented by the Government along with this proposed amendment reveals a striking confession — the Government admits that, after 22 years of the enactment of the Electricity Act, 2003, and despite major structural reforms under the Act, the distribution segment continues to face severe financial stress, with cumulative losses increasing from Rs. 26,000 crores to Rs. 6.9 lakh crores over the last 22 years. We have been opposing those reforms for more than two decades. We once again reaffirm that any further course of reform will worsen the situation, and this amendment will be the last nail on India's public power sector.

Far from supporting the sector in the public interest, this Bill is designed to pave the way for large-scale privatisation, commercialisation, and centralisation of the Indian power system. It threatens the financial sustainability of public utilities, the democratic rights of consumers, the federal structure of the Indian State, and the livelihoods of lakhs of power sector workers across the country.

We warn that, if implemented, the Bill will dismantle the integrated and socially driven electricity framework built over decades and hand over the most profitable segments of power distribution and generation to private corporations—leaving the public sector to bear the losses and social obligations. Below, we have outlined our major objections to this Bill for your ready reference. A detailed clause-by-clause comment is enclosed herewith.

**I Sections 2(20a) & 164 – Electric Line Authority (ELA):**

Section 164 of the Electricity Act, 2003 was originally intended as a limited facilitative provision. It allowed the government to temporarily grant powers under the Indian Telegraph Act, 1885 to licensed utilities such as STUs and DISCOMs, only to overcome Right of Way difficulties in placing electric lines. This mechanism was exceptional and conditional, tied to the licensee, and subject to legal safeguards, compensation norms, and judicial oversight. It never created a standalone authority or displaced the statutory responsibility of licensees to build and maintain the electricity network.

The amendment fundamentally alters this purpose by creating a separate body — the Electric Line Authority (ELA) — which is not a licensee but is given permanent, independent powers to lay, maintain, repair, or remove electric lines. This authority operates outside the regulatory jurisdiction of the State Electricity Regulatory Commission and is no longer anchored to the Telegraph Act, removing legal safeguards for landowners and limiting

accountability. As a result, a parallel infrastructure operator is created alongside STUs and DISCOMs, leading to overlapping powers and institutional confusion.

This new structure directly contradicts the core design of the Electricity Act. Sections 39, 40 and 42 clearly place the responsibility for planning, execution and maintenance of transmission and distribution systems with licensed entities. Regulatory control over tariffs, expenditure and performance lies with the SERC under Sections 61 and 86. With the ELA acting outside this framework, fundamental questions emerge: Who approves investments? Who handles outages and accidents? Who ensures compliance with grid standards? Ownership, accountability and operational control become fragmented, undermining the integrated, licensee-centric model of the Act.

The implications are severe. Public utilities face a loss of control, stranded assets and financial instability, while consumers encounter delayed repairs, higher costs and unreliable supply. Workers face outsourcing and safety risks, farmers risk irrigation disruptions and states lose administrative oversight. The amendment replaces a supportive legal tool with an unaccountable parallel authority, resulting not in reform but in institutional breakdown. The rational course is to repeal Section 2(20a) and the amended Section 164, retain the original provision under the Telegraph Act, and strengthen STUs and DISCOMs through better coordination, digital RoW platforms and faster dispute resolution, rather than creating a conflicting authority.

**Energy Storage Systems (ESS) under Section 2(26a):**

The proposed definition of Energy Storage Systems (ESS) under Section 2(26a) and its inclusion in the "power system" under Section 2(50)(k) is necessary and should be supported. However, ESS alone cannot address all grid challenges arising from large-scale renewable energy. Voltage instability, low fault levels, and reactive power deficits require compensation devices such as STATCOM, DSTATCOM, SVC, and other FACTS technologies. These systems are critical to prevent voltage collapse, support frequency stability, and maintain power quality. Therefore, the Act must explicitly recognize these devices alongside ESS. A new clause — Section 2(26b) — should define "Compensation Devices" and mandate that all inverters meet CEA grid-support standards.

To ensure grid security and coordinated deployment, ESS and compensation devices should be prioritised by public sector utilities rather than left solely to private markets. Thus, while supporting the proposed ESS definition, it is essential to expand the amendment to include compensation technologies as part of the power system for regulatory, technical, and public interest reasons.

- **Backdoor Privatisation through Multiple Licensees (Sections 14, 42, 43):**

The Bill allows multiple distribution licensees in the same area using the same public network, under the pretext of "competition" and "consumer choice." This move will enable private companies to cherry-pick high-paying industrial and commercial consumers, while public DISCOMs will be left serving low-revenue rural and domestic consumers.

Public utilities will be forced to maintain and upgrade the entire network infrastructure even as private licensees use it freely, effectively socialising costs and privatising profits. This "separation of content and carriage" model will cripple public DISCOM finances, destroy cross-subsidy mechanisms, and ultimately push household and agricultural tariffs upward.

NCCOEEE has been fighting against the private sector Smart Metering process, since Smart Metering is an essential technological implant for enabling this multiple licensing. Now this Bill will make further severe impact on some of the following infrastructural areas:

**Network Related issue:** Everywhere the licensees have made significant investments in developing their distribution networks over the years. Allowing new licensees to use this infrastructure without sharing the associated costs is unfair. Such an arrangement would weaken the purpose of the incumbent licensee, eventually leading to the deterioration of the network. When everyone is responsible, no one truly is — meaning no party will feel obligated to build or improve distribution assets, resulting in serious infrastructure gaps.

**Quality of Supply issue:** Quality of supply depends on the strength of the network, which remains the responsibility of the incumbent licensee. New entrants, however, have no duty to maintain or upgrade the infrastructure they use, nor are they accountable for meeting supply standards. Separating "supply" from "infrastructure" could cause a decline in network quality and reliability. Shared network use will increase operational risks, complicate coordination, and add regulatory complexity. Instead of improving services, this setup could lead to higher technical losses and poorer supply quality.

**Cherry-Picking:** The proposed system encourages new licensees to target only high-value consumers, leaving rural and low-income areas with the incumbent licensee. This selective service approach will raise tariffs for low-income, SC/ST, BPL, and domestic consumers who currently receive subsidised electricity.

**Regulatory Assets related issues:** If new licensees enter the area, incumbent utilities will be unable to recover their accumulated regulatory assets through tariff revisions. Consumers will likely shift to new suppliers offering lower rates, as those entities will not carry the burden of past under-recoveries, making the recovery mechanism ineffective.

**Power Purchase Fixed Costs related issues:** Incumbent licensees have long-term Power Purchase Agreements (PPAs) approved by the State Commission to ensure reliable power supply for the State. These are binding commitments, not optional contracts. Most PPAs involve fixed cost obligations spanning 20–25 years. If new licensees capture high-paying consumers, incumbent utilities will still bear the heavy fixed costs of these PPAs, despite reduced sales. This would worsen their financial stress and make the present arrangement unsustainable.

Further, Section 43(4) empowers regulatory commissions to allow consumers with a demand above 1 MW to shift to private suppliers, reducing the revenue of public DISCOMs and further narrowing the scope of cross-subsidy. At the same time, the state utilities need to maintain the contract demand of those high-end consumers as back-up, putting a further financial burden on state DISCOMs.

Again, this allows private distribution licensees to avoid their universal supply obligation. They can refuse to supply power to any applicant if it is not profitable—even though there is a minimum threshold of 1 MW, this limit can easily be modified if such an approach is permitted in principle.

The licensee designated as the 'Supplier of Last Resort' must maintain costly standby capacity and power procurement arrangements to handle unpredictable return loads, often without fair or full compensation. This places a

severe strain on working capital and exposes the licensee to financial penalties for deviations. Moreover, DISCOMs struggle to accurately forecast demand due to the sudden and unpredictable exit and re-entry of large consumers, leading to expensive short-term power purchases or penalty payments under the Deviation Settlement Mechanism (DSM). Therefore, no licensee should be mandated to act as Supplier of Last Resort without a guaranteed cost recovery and compensation mechanism, which must be explicitly stated. Additionally, the proposed proviso requires clearer language to close any loopholes that might enable distribution licensees to abandon consumers whose existing supply arrangements fail. Such “throwing off” consumers and charging premium fees for restoring supply contradicts the spirit of the Act and should be removed from the clause.

➢ **Section 25 – Transmission Approval:**

The proposed proviso to Section 25, allowing the Appropriate Government to prescribe the manner of approval and implementation of inter-state or intra-state transmission systems, risks undermining the carefully balanced framework established under the Electricity Act, 2003. The Act vests planning and coordination responsibilities with the State Transmission Utility (STU) under Section 39, which functions as a neutral entity to ensure non-discriminatory open access and system development based on technical and economic considerations. At present, transmission projects are scrutinized by the State Electricity Regulatory Commission (SERC) through Multi-Year Tariff (MYT) mechanisms, ensuring that investments are technically justified, economically prudent, and that only reasonable costs are passed on to consumers. Introducing a parallel approval mechanism by the government creates duplication, delays, and the possibility of decisions being influenced by non-technical or political priorities rather than load growth, system reliability, or CEA/SERC-approved grid plans, particularly at a time when rapid transmission expansion is needed for renewable energy integration.

While developmental priorities of the government are important, they must operate within the existing regulatory and techno-economic framework rather than overriding it. Allowing government-prescribed approval processes could compromise the neutrality of STUs, weaken open access implementation, and delay investment decisions by creating overlapping jurisdictions between government and SERC. Instead of adding a redundant layer, transmission planning should remain governed by STUs, CEA, and SERC through transparent, technically driven processes. Therefore, the proposed proviso should be opposed or, at most, modified to allow only non-binding guidelines that align with SERC/CEA frameworks and do not dilute regulatory prudence, neutrality, or efficiency in transmission development.

➢ **Elimination of Cross-Subsidy and Rise in Tariffs (Section 61(g)):**

The Central Government is desperate to do away with cross-subsidies and put the burden on states. The proposed complete elimination of cross-subsidies within five years, especially for Railways, Metro Rail, and manufacturing industries, will cause a massive revenue shock to public utilities. Cross-subsidies are not inefficiencies—they are a social necessity in a country where millions depend on affordable electricity for domestic, agricultural, and livelihood needs; this is the right of the people earned and protected through long struggle.

The removal of cross-subsidies will increase power tariffs for poor and rural households, deepen inequality, and push

farmers further into distress. This move, driven by corporate interests, is anti-people, anti-farmer, and anti-worker.

Providing Government subsidy is practically difficult; as this will erode exchequer from funding infrastructure and social security measures. The proposal may ultimately end up in accumulation of regulatory assets. State-specific socio-economic realities must be respected. The trajectory for cross-subsidy reduction should be left to SERCs.

➢ **Marketisation and Commodification of Power (Section 66):**

By promoting power markets and financial products such as contracts for difference, the Bill treats electricity—a basic human need—as a speculative commodity leading to price volatility and unpredictability for consumers. Already, the Central Government has established Virtual Power Markets to facilitate speculative trading. This amendment will introduce further price volatility, increase consumer risk, and weaken long-term planning for energy security.

The push toward market-based trading mechanisms will undermine long-term power purchase agreements, destabilise DISCOM finances, and lead to power shortages and tariff shocks, as already witnessed in deregulated markets globally. The desperate move of the Central Government to convert the entire power sector to renewable energy and make renewable energy a market-oriented product must be understood as a direct assault on the stability of power supply.

➢ **Curtailment of Regulatory Independence and Consumer Protection (Sections 58, 64, 126, 127):**

The quality of supply is directly linked to the financial health of utilities. Once DISCOMs lose high-paying consumers, their capacity to maintain service standards will collapse. The amendments will therefore reduce service quality while burdening consumers with higher costs.

➢ **Sacrificing National Security in the Name of Ease of Doing Business (Sections 15(2), 18(2)(b)):**

The Bill removes the mandatory no-objection requirement from the Central Government for obtaining the license in defence establishment areas. This amendment, in the name of ease of doing business, will raise security risks and operational conflicts. Entrusting the supply of power to installations of strategic significance with private licensees may jeopardise national security.

❍ **Centralisation and Federal Overreach (Sections 86(e), 90, 166, 176):**

The Bill represents a systematic erosion of federalism in the electricity sector.

- ❍ Section 86(e) imposes mandatory renewable energy consumption targets on states, regardless of local capacity, cost, or infrastructure.
- ❍ Section 90 allows the Central Government to remove members of State Electricity Regulatory Commissions on vague grounds like “wilful violation” or “gross negligence.” This provision will undermine regulatory independence and coerce state regulators into compliance with central directives.
- ❍ Section 166(1A) creates a Central Electricity Council chaired by the Union Power Minister, giving the Centre dominant control over state energy policies. This structure will reduce states to implementing agencies instead of autonomous authorities.
- ❍ Section 176 replaces the phrase “for carrying out the provisions” with “for carrying out the purposes” of the Act—granting the Central Government unlimited

rule-making powers that bypass parliamentary and public scrutiny.

Together, these amendments constitute a direct assault on the federal character of India's Constitution, turning electricity governance into a tool for centralised, corporate-driven policy imposition. The impact will be massive. As a matter of basic legislative propriety, rules are to be made in accordance with explicit provisions of the parent law. A subordinate legislation is to follow the parent law in letter and spirit. The inclusion in the draft to provide powers to the Central Government to make rules in accordance with the 'purposes' of the Act instead of 'provisions' of the Act strikes at the very root of legislative propriety. The proposed inclusion violates basic legislative principles and requires an unqualified withdrawal. There are five rule making authorities in the Act. It is interesting to note that this liberty was proposed to be provided only for the Central Government and none of the other authorities. Provisions in the Act are concrete in nature, whereas purposes are abstract and are liable to convenient interpretations. Such an improper license to the Central Government may trigger propensities for indulging in extra judicial shenanigans which are impermissible in the scheme of things. Proposal may be recalled unconditionally.

❍ **Threat to Energy Security and Employment:** Privatisation and open access policies will dismantle integrated planning and resource adequacy mechanisms, increasing dependence on volatile markets. This will endanger grid stability, reliability, and employment security for power sector workers.

NCCOEEE warns that lakhs of employees in generation, transmission, and distribution utilities will face uncertainty, contractualisation, and job losses as private licensees cherry-pick profitable areas and outsource operations.

The Bill must be seen as part of a wider neoliberal strategy: handing over the entire electricity supply chain—from generation to distribution—to private monopolies. After decades of starving state utilities of funds and loading them with debt, the Centre now cites inefficiency to justify complete privatisation.

Experience from Odisha, Delhi, and other states shows that privatisation results in higher tariffs, unpaid dues to generating companies, job losses, and neglect of rural areas. The new Bill will replicate this crisis nationwide.

We firmly believe that this policy is not about efficiency—it is about transferring public wealth into private hands.

**We Demand:** Withdraw the Electricity (Amendment) Bill, 2025 immediately; guarantee affordable power for all citizens as a social right, not a market commodity; stop all forms of privatisation and franchising in generation, transmission and distribution; protect state utilities and federal powers; retain cross-subsidy and universal service obligations; hold nationwide consultations with trade unions, states, and consumer bodies before any legislative change. Electricity is a public right, not a corporate commodity.

We hope that we have been able to communicate our opposition to the draft Bill. We request you to intervene and do the needful. A detailed clause-by-clause opposition is attached herewith.

Thank you

**J. LOURDU BASTIN RAJ**
President

**A. SEKKIZHAR**
General Secretary

TNEB Employees Federation
Regd No : 3600/CNI
Recognised Affiliated with UTUC

**Encl: As Above**

# ILO ACTRAV பயிலகத்தில் இரண்டு நாட்கள்

**வணக்கம் தோழர்களே.**

கடந்த மாதம் 18.09.2025 மற்றும் 19.9.2025 அன்று டெல்லியில் உள்ள நோவட்டல் ஹோட்டலில் இந்தியா முழுவதும் உள்ள மத்திய தொழிற்சங்கங்களின் இளைஞர் தலைவர்களின் பங்கேற்புடன் ILO - ACTRAV ஆல் பயிலக வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது அந்த பயிலக வகுப்பில் க்கூக்இ சார்பாக தமிழகத்தில் இருந்து பொதுச் செயலாளர் அவர்களின் அறிவுறுத்தலின் படி கலந்து கொண்டேன்.

ACTRAV -இன் இயக்குனர் திருமதி மரியா ஹெலினா ஆண்ட்ரே அவர்கள் பட்டறையை துவக்கி வைத்து தொழிற்சங்கங்களின் மறுமலர்ச்சி மற்றும் இளைய தலைவர்களின் பங்கு என்ற தலைப்பில் முக்கிய உரையை நிகழ்த்தினார்.

நாங்கள் இந்தியாவின் எதிர்காலம் - இன்று வழிநடத்துகிறோம் மற்றும் நாளைய தினத்தை வடிவமைக்கிறோம் என்ற தலைப்பில் தொலைநோக்கு உரை அமைந்தது.

தொழிலாளர் நிபுணர் திருமதி ஓட்சுஜி யுகி தொழிற்சங்கங்கள் குறித்து இரண்டு இனம் ஆய்வாளர்களிடம் (திருமதி தௌப்ரியா மற்றும் திருமதி நிதி) அவர்களிடம் பேட்டி கண்டார்.

தொழிற்சங்க இயக்கங்களின் இளம் உறுப்பினர்களின் பங்களிப்பு குறைந்து கொண்டே வருகிறது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டதோடு அதற்க்கான கரணங்கள் அலசப்பட்டன. இன்றைய பல இளம் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களை வேலை நிறுத்தங்கள் செய்யக்கூடிய ஒரு அமைப்பு ஒன்றே கருதுகின்றனர்.

மேலும் தொழிற்சங்க ஈடுபாட்டால் முதலாளிகளின் பழிவாங்கல் அல்லது வேலை இழப்புக்கு தாங்கள் ஆளாக நேரிடும் என்று அஞ்சுகிறார்கள், எனவே தான் இளம் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களில் சேருவதை விரும்புவதுல்லை இதனை மாற்றுவதற்கு இளம் தொழிலார்களை ஒழுங்கமைக்கும் வகையில் புதிய டிஜிட்டல் முறைகள் மற்றும் புதுமையான யுக்திகளை தொழிற்சங்கங்கள் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

**பட்டறையில் இருந்து பெற்ற பரிந்துரைகள்:-**

- ஒவ்வொரு மத்திய தொழிற்சங்கமும் தேசிய மாநில மற்றும் மாவட்ட அளவில் ஒரு பிரத்யோக இளைஞர் குழுவை உருவாக்க வேண்டும்.
- இளைஞர் தலைவர்களை ஒழுங்கமைத்தல் பேச்சுவார்த்தை மற்றும் தலமைத்துவத்தில் அவர்களின் திறமைகளை வளர்க்க கட்டமைக்கப்பட்ட பயிற்சி திட்டங்களை உருவாக்கி அமல்படுத்திட வேண்டும்.
- இளம் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் அவர்களை தொழிற்சங்கத்தில் தக்க வைத்துக்கொள்ள டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகங்களில் இணைக்க வேண்டும்.
- இளைய தலைமுறைகளுக்கு இடையேயான இடைவெளியை நீக்கி ஒத்துழைப்பு உறுதி செய்வதற்காக, இளைய தலைவர்களுக்கும் மூத்த தலைவர்களுக்கும் இடையே வழக்கமான தொடர்புகளை உறுதி செய்ய வேண்டும்.

- தொழிற்சங்கத்தில் அடுத்த கட்டமாக இளம் தலைவர்களை உருவாக்க வேண்டும்.
- இளம் தலைவர்களுக்கு தொழிற்சங்க நீதியான முடிவுகள் எடுக்கப்படும்போது மேலும் கொள்கை விவாதங்களில் முக்கிய பங்களிப்பு அளிக்கப்பட வேண்டும்.
- சமூக ஊடகங்களில் தொழிற்சங்க நிலைப்பாடு மற்றும் கொள்கையை விரிவாக பதிவேற்றம் செய்து இளைஞர்களுக்கு தொழிற்சங்க நிலைப்பாட்டை தெரியப்படுத்துதல் வேண்டும்.
- இளம் தலைவர்களுக்கு பேச்சாற்றல் எழுத்தாற்றல் போன்ற திறமைகளை மேம்படுத்த பயிற்சி வகுப்புகள் நடத்திட வேண்டும்.
- ஒவ்வொரு தொழிற்சங்கமும் மாவட்ட அளவில் இளைஞர்களை தேர்ந்தெடுத்து குழு அமைத்து ஒவ்வொருவருக்கும் பதவிகள் வழங்கப்பட்டு தொழிற்சங்கத்தை வலுப்படுத்த புதிய யுக்திகளை கையாள வேண்டும்.
- உறுப்பினர் அட்டையை ஆன்லைன் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளும் அளவில் வலைத்தளம் உருவாக்கிட வேண்டும்.
- உறுப்பினர் சந்தா மற்றும் நன்கொடை போன்றவற்றை UPI-யில் பெற்றிட வேண்டும்.
- தொழிற்சங்க வலைத்தளத்தில் நிறுவனத்தின் உடைய சட்ட திட்டங்களை பதிவேற்றம் செய்திட வேண்டும்.
- WhatsApp, Facebook, Instagram, மற்றும் Twitter போன்ற சமூக வலைத்தளங்களில் தனி கணக்கு துவங்கி தொழிலாளர்களின் மத்தியில் தொழிற்சங்கங்களின் செயல்பாடு குறித்து விழிப்புணர்வை மேம்படுத்த வேண்டும்.
- 50% பெண் தலைவர்களை தேர்ந்தெடுத்திட மேலும் பெண் தொழிலாளர்களுக்கு முக்கியத்துவம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்திட வேண்டும்.
- இளம் பெண் தலைவர்கள் அதிகாரம் பெறுவதையும் முழுமையாக ஆதரிக்கபடுத்துவதையும் முடிவெடுக்கும் மட்டத்தில் அவர்களின் பங்கேற்பை அதிகரிப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- மேற்கண்ட கருத்துக்கள் அனைத்தும் பட்டறையில் இருந்து பெறப்பட்டவை ஆகும்....!
- பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு நடத்திய தொழிற்சங்கங்களின் மறுமலர்ச்சி மற்றும் இளைஞர்களின் பங்கு என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டறையில் கலந்து கொள்ள வாய்ப்பு அளித்த பொது செயலாளர் உள்ளிட்ட தலைமை நிர்வாகிகள் அனைவருக்கும் நான் சார்ந்த தஞ்சை கிளையின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

**E. கனகராஜ்**
மண்டல செயலாளர்,
தஞ்சாவூர்

## நான்மணிக்கடிகை பாடல். 40 | தமிழறிஞர் வை.வேதரெத்தினம் உரை!

### கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தல்!

*கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தலெஞ் ஞான்றும்*
*இரப்பவர்க்குச் செல்சார்ரொன் றீவார் - பரப்பமைந்த*
*தானைக்குச் செல்சார் தறுகண்மை ஊனுண்டல்*
*செய்யாமை செல்சா ருயிர்க்கு!*

**சந்தி பிரித்து எழுதிய பாடல்:**

*கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தல் எஞ்ஞான்றும்*
*இரப்பவர்க்குச் செல்சார் ஒன்று ஈவார் - பரப்பு அமைந்த*
*தானைக்குச் செல்சார் தறுகண்மை ஊனுண்டல்*
*செய்யாமை செல்சார் உயிர்க்கு!*

**கருத்துரை:**

தன்னிடம் பொருள் இருந்தும், இரவலர்க்குத் தர விரும்பாத கறுப்பு உள்ளம் படைத்தோர்க்குப் பற்றுக்கோடாய் அமைவது; இரவலரைக் கண்டதும் தலைகுனிந்து கொண்டு, கண்டும் காணாது நிற்றலாகும்!

இல்லையென்று இரப்பவர்களுக்கு பற்றுக் கோடாய் அமைவது, எக்காலத்தும் இல்லையென்று சொல்லாது ஈத்துவக்கும் நன்மனம் படைத்த நல்லவர்களை நாடிச் செல்லுதலாகும்!

போர்க்களத்தில் பரபரப்பும், சுறுசுறுப்புமாக இயங்கும் படைகளுக்கு வெற்றியை ஈட்டித் தரும் பற்றுக் கோடாய் அமைவது அவர்களது அச்சமின்மையும் வீரமுமாகும்!

அதுபோல், மனித உயிர்களுக்கு மாண்பு தரும் பற்றுக் கோடாக அமைவது பிற உயிரினங்களைக் கொன்று அவற்றின் இறைச்சியை உண்ணாது தவிர்த்தல் ஆகும்!

**அருஞ்சொற்பொருள்:**

கரப்பவர்க்கு = ஏதும் இல்லை என்று ஒளிப்பவர்களுக்கு; செல்சார் = அவர் மேற்கொள்ளும் சார்பு; (செல்வார் = சார்பு என்பது பொருள்; அஃதாவது சார்ந்து நிற்றற்குரிய நிலை அல்லது பற்றுக்கோடு) கவிழ்தல் = இரந்து வருவாரைக் கண்டவிடத்து முகம் கவிழ்ந்து நிற்றலாகும்; எஞ்ஞான்றும் = எக்காலத்தும்; இரப்பவர்க்கு = இல்லையென்று கேட்டு வரும் இரவலர்க்கு; செல்சார் = செல்லுதற்குரிய பற்றுக்கோடு; ஒன்று ஈவார் = தாம் வேண்டுவதொன்றை தந்து மகிழ்ச்சி கொள்ளும் செல்வராவார்; பரப்பு அமைந்த = போரில் சுறுசுறுப்பு உடைய; தானைக்கு = படைக்கு; செல்சார் = பற்றுக்கோடு; தறுகண்மை = வீரமாகும்; உயிர்க்கு = ஒருவனது உயிர்க்கு; செல்சார் = செல்லுதற்குரிய பற்றுக்கோடு; ஊன் உண்டல் செய்யாமை = பிற உயிர்களின் இறைச்சியை உண்ணாமல் இருத்தலாகும்.

# மகாபாரத போருக்கு யார் காரணம்?

**- சிவநாச்சியார்**

திரௌபதிக்கு தனது வயது 80 ஆனது போல இருந்தது.

அஸ்தினாபுரம் நகரைச் சுற்றி விதவைகள் அதிகமாக இருந்தனர். ஒரு சில ஆண்கள் மட்டுமே காணப்பட்டனர்.

அனாதைகள் அங்குமிங்கும் சுற்றித் திரிவதைக் கண்ட அரசி திரௌபதி, அஸ்தினாபுரம் அரண்மனையில் அசையாமல் வெற்றிடத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அங்கிருந்த ஸ்ரீ கிருஷ்ணர் திரௌபதி அறைக்குள் நுழைய, திரௌபதி கிருஷ்ணரைப் பார்த்ததும் ஓடி வந்து அவனிடம் ஒட்டிக் கொண்டாள்.

கிருஷ்ணன் அவளது தலையை தடவிக் கொடுக்கிறார், அவளோ அழ தொடங்கினாள்.

நேரம் மெல்ல நகர்கிறது. அவளிடமிருந்து விலகி பக்கத்து அரியணையில் உட்கார்ந்த கிருஷ்ணன் கேட்டார்.

''திரௌபதி, என்ன நடந்தது?''

''ஒன்றும் நடக்கவில்லையே கிருஷ்ணா!''

**கிருஷ்ணர் :** ''விதி மிகவும் கொடூரமானது பாஞ்சாலி. நாம் நினைப்பது போல் வேலை செய்யாது! அது அதன் போக்கில் அதனுடைய செயல்களைச் செய்கிறது, முடிவுகளையும் மாற்றுகிறது.

நீ பழிவாங்க நினைத்தாய், வெற்றி பெற்றாய், திரௌபதி!

உன் பழிவாங்கல் முடிந்தது. துரியோதனனும் துச்சாதனனும் மட்டுமல்ல, கௌரவர்கள் அனைவரும் மடிந்து விட்டனர்.

நீ மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்!''

**திரௌபதி :** ''சகோதரா, என் காயங்களைத் ஆற்ற வந்தீர்களா அல்லது அதன்மீது உப்பு தூவ வந்தீர்களா?''

**கிருஷ்ணர் :** ''இல்லை, திரௌபதி. உண்மை நிலையையும், நமது தொலை நோக்கு பார்வையற்ற செயல்களின் விளைவு தான் இந்த மகாபாரத போர் என்பதை உணர்த்த வந்தேன்.''

**திரௌபதி :** ''அதனால் என்ன? இந்தப் போருக்கு நான் தான் முழுப் பொறுப்பா கிருஷ்ணா?''

**கிருஷ்ணர் :** ''இல்லை, திரௌபதி நீ மட்டுமே காரணம் என்று கருதாதே. ஆனால்,உன் செயல்களில் நீ கொஞ்சம் தொலைநோக்கு பார்வையை கொண்டிருந்து இருப்பாயேயானால், நீ இவ்வளவு துன்பங்களை அனுபவித்திருக்க மாட்டாய்.''

**திரௌபதி :** ''நான் என்ன செய்திருக்க முடியும் கிருஷ்ணா?''

**கிருஷ்ணர் :** ''நீ நிறைய செய்திருக்க முடியும். உனது சுயம்வரம் நடந்தபோது, கர்ணனை நீ அப்படி அவமானப்படுத்தாமல், போட்டியில் கலந்து கொள்ள அவருக்கு வாய்ப்பளித்து இருந்தால் ஒருவேளை முடிவு வேறு விதமாக இருந்திருக்க கூடும்!

அதற்குப் பிறகு குந்தி உன்னை ஐந்து கணவர் களுக்கு மனைவி யாகும் படி கட்டளையிட்டதை, அப்போது ஏற்றுக் கொள்ளாமல் இருந்திருந்தாலும் முடிவு வேறு விதமாக இருந்திருக்கும்.

அதற்கு பிறகு உன் அரண்மனையில் துரியோதனனை அவமானப்படுத்தினாய்.

பார்வையற்றவரின் மகன்கள் குருடர்கள் என்று அவ்வாறு நீ சொல்லாமலிருந்திருந்தால் நீ மானபங்கப்பட்டிருக்கமாட்டாய்.

அப்போதும், ஒருவேளை, சூழ்நிலைகள் வேறுவிதமாக இருந்திருக்கும்.

நம் வார்த்தைகள் கூட நம் செயலின் விளைவுகளுக்கு பொறுப்பு என்பதை உணர்ந்து கொள் திரௌபதி.

நீ பேசுவதற்கு முன் உன் ஒவ்வொரு வார்த்தையையும் எடை போடுதல் மிகவும் முக்கியமானது.

இல்லையெனில் அதன் தீய விளைவுகள் உன்னை மட்டுமல்ல, உனது சுற்றுப்புறத்தையும் மகிழ்ச்சியற்றதாக ஆக்கிவிடும்.

பற்களில் விஷமில்லை, ஆனால் பேசும் வார்த்தைகளில் விஷம் கக்கும் ஒரே விலங்கு இவ்வுலகில் மனிதன் மட்டுமே.''

எனவே, வார்த்தைகளை புத்திசாலித்தன மாக பயன்படுத்த வேண்டும்.

அதாவது, யாருடைய மனதையும் புண் படுத்தாத வகையில் பயன்படுத்த வேண்டும்.

நமக்கு பிடிக்காத செயலை ஒருவர் செய்து அதனால் கோபம் உண்டாகி திட்டுவதாக இருந்தாலும் நம் வார்த்தைகள் அவரை திருத்துவதாக அதாவது தவறை உணர்ந்து திருந்தக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்.

**மகாபாரதம் நமக்குள் மறைந்திருக்கிறது.**

## கற்பனைகள் மலரும் விதம்

ஒரு செயலை அல்லது அனுபோகத்தை (அனுபவம்) அது நடவாத முன் ஞாபகத்தினால் உருவாக்கினால் அது கற்பனை.

புலனுணர்ச்சிகளிலே அதாவது ஐம்புலங் களினால் குறுகி நிற்கும் அறிவின் நிலையி லிருந்து எழும் கற்பனைகளுக்கு, நம் உடல் பலம், அந்த நிகழ்ச்சிக்குரிய சமய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தர உதவியாக இருக்கும்.

மனம் விரிந்த பிரபஞ்ச அகண்டகார ஆராய்ச்சி எல்லையிலே எழும் கற்பனைகளுக்கு (பொதுநலம் கருதி எழும் கற்பனை) இயற்கையில் அமைந்துள்ள எல்லாவகையான பலமும் உதவியாக இருக்கும்.

நீண்டகாலமாக சமுதாயத்தைத் தொடர்ந்து வரும் உலக அனுபவங்கள் அதாவது அன்றைய மக்களின் அறிவின் பலம் ஒன்று சேரும் போது அக்கற்பனைகளைச் செயல்படுத்தும் சூழ்நிலை களை உருவாக்கிப் பின்னர் அவை செயலாக மலரும் படி செய்யும். உதாரணத்திற்கு ஒரு ஊரில் தார்சாலை அமைய வேண்டும் அல்லது ஒரு மருத்துவமனை அமைய வேண்டும் என்று எல்லோரும் சேர்ந்து எண்ணும் போது அவை அந்த எண்ணங்கள் இயற்கையின் பலத்தோடு ஒன்று சேரும் போது கற்பனை நிஜமாகும்.

முதன் முதலாக சித்திரம் எழுதப் பழகுபவனுக்கு எண்ணத்தில் உள்ளபடி உருவம் அமைவதில்லை. பழகப் பழக எந்தவிதமாக எண்ணுகிறானோ அவ்விதமே அவன் எழுதும் உருவமும் அமைந்து விடுகிறது.

''அறிவின் விழிப்புடன் செயலாற்ற வேண்டுமென முயற்சிப் பவர்களுக்கு இது போன்றே ஐம்புலன்களும் உடனே கட்டுப்பட்டு விடாது. பழகப் பழக எதை எண்ணுகிறானோ அதன்படி செயலாற்றும் திறமையும் வல்லமையும் ஏற்பட்டுவிடும்'' - வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஆற்றிய உரை.

நாம் கற்பனையில் எதை வேண்டு மானாலும் நினைக்கலாம். ஆனால் அந்த கற்பனை இயற்கைக்கு ஒத்ததாக இருக்க வேண்டும். நோக்கம் பொதுநலமாக இருந்தால் கற்பனை வெகு விரைவில் நிஜமாகும்.

சிந்தனை என்பது ஒவ்வொருவருரின் அறிவின் வெளிபாடு. எண்ணம் என்பது எல்லா பதிவுகளின் ( உடலின் மையப்பகுதி - Hard disk) வெளிப்பாடு. தானாக உருவாகும். எண்ணங்களி லிருந்து தான் கற்பனை (imagination) உருவாகிறது.

ஆகவே நம் இலட்சியம் கற்பனை நிஜமாக வேண்டுமெனில் திட மனதுடன் பொறுமை கொண்டு செயல்பட வேண்டும்.

**''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணிய ராகப் பெறின்''**

குறளின் நெறி. ஒரு செயலை எண்ணியவர் செயல் உறுதி கொண்டவராக இருந்தால் அவர் நினைத்த செயலை நினைத்தபடியே செய்து முடிப்பார். ●

# CITU தமிழ் மாநில 16வது மாநில மாநாட்டில் தேர்வு செய்யப்பட்டுள்ள புதிய மாநில நிர்வாகிகளுக்கு நல்வாழ்த்துகள்

**- தமிழ்நாடு UTUC**




**16வது தமிழ்நாடு மாநில CITU மாநாடு தீர்மானம்-7**

தமிழ்நாடு மின்துறையை பொதுத்துறையாக பாதுகாத்திட மின்சார தொழிலாளி மின்நுகர்வோர், விவசாயிகள் இணைந்து போராடுவோம்.

நவீன தாராளமயக்கொள்கை அமலாக்கம் மின்சாரத்துறையையும் விட்டு வைக்கவில்லை. மின் துறையில் தனியார் மயத்தை கொண்டு வருவதற்காக தனியார் பெருமுதலாளிகள் மின் உற்பத்தியிலும், விநியோகத்திலும் போட்டிச் சந்தையாளர்களாக மாற்றிட கொண்டு வரப்பட்ட சட்டம் தான் மின்சார சட்டம் 2003. இந்த மின்சார சட்டம் 2003ல் அமலாக்கத்திற்கு பின்பு மாநில மின்வாரியங்கள் துண்டாடப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

மின்சார சட்டம் 2003 அமலாக்க முற்பட்ட பொழுது தமிழகம் உள்ளிட்ட 18 மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையிலும் கூட தனியார் முதலாளிகளை மின் உற்பத்தியிலும், விநியோகத்திலும் அனுமதிக்க மின்சார சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து இந்த மசோதாவை நிறைவேற்ற பல கட்டமாக 2014ம் ஆண்டு முதல் முயற்சி செய்து வருகிறார்கள். தற்போது மின்சார சட்ட திருத்த மசோதா 2025 வரைவு நகலை வழங்கியுள்ளது.

ஒன்றிய அரசு ஒரே நாடு, ஒரே மின்சாரம் என்ற முறையில் அதானியின் பவர் கார்ப்பரேஷன் இருக்க வேண்டும் என நினைக்கிறது. ஏனெனில் நாட்டின் மின் பரிமாற்றத்துறையில் மிகப்பெரிய நிறுவனமாக டிரான்ஸ்மிஷன் உள்ளது. அதானி இத்துறையில் இதன் சந்தை பங்களிப்பு 22 சதம். இதன் மொத்த சந்தை மதிப்பு 4 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இவர்களிடத்தில் மின்சாரத்தை கொள்முதல் செய்த மின்வாரியங்கள் கடனில் மூழ்கி உள்ளது.

திறந்தவெளி மின் பரிமாற்றக் கொள்கையின் மூலம் மின்சாரத்தை விநியோகிக்கும் நிறுவனங்கள் மின்நுகர்வோர்களை தேர்வு செய்யும் உரிமையை பெறுவதன் மூலம் மின் விநியோக நிறுவனங்கள் கூடுதலான மின் கட்டணத்தை செலுத்தும் நுகர்வோர்களை தேர்வு செய்யும் வாய்ப்பு வழங்கப்படுவதால் இந்நிறுவனங்கள் நகர்புற மின்நுகர்வோர்களையே தேர்வு செய்வார்கள். இந்த நிலை ஏற்பட்டால் விவசாயிகளுக்கும், கிராமப்புற மக்களுக்கும் நகர்புறத்தில் வாழும் குறைவான மின் பயனீடு செய்யும் பொது மக்களும் மின்சாரம் இல்லாமல் கடுமையாக பாதிக்கப்படுவார்கள்.

குறுக்கு வெட்டு மானியம் ரத்து செய்யப்படும். மின் கட்டணம் நிர்ணயம் செய்கின்ற உரிமை மாநில அரசிடமிருந்து பறிபோகும். மின் விநியோகத்தை தனியாருக்கு விடுவதற்கு ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை அமலாக்க துடிக்கிறது.

சில மாநில அரசுகளும் இந்த திட்டத்தை அமலாக்க முயற்சித்து வருகின்றனர். அரசு வழங்கக் கூடிய சலுகை மற்றும் இலவச மின்சாரத்திற்கான மானியத்தை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாநில அரசின் கட்டுப்பாட்டில் மின்சாரத்துறை இருக்காது, ஒன்றிய அரசே மேலாண்மை செய்யும்.

எனவே தேச நலனை கருத்திற்கொண்டு மின்சாரதுறை மாநில அரசின் கட்டுபாட்டில் இருக்க மின்சார சட்டத்திருத்த மசோதாவை முற்றிலும் கைவிட மின் தொழிலாளர்களும், நுகர்வோர்களும், விவசாயிகளும் இணைந்து போராட முன்வர வேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

**தோழர் ஜெய்சங்கர்**
பொதுச் செயலாளர்
மின் ஊழியர் மத்திய அமைப்பு

## ✉ பெடரேஷன் கடிதங்கள் ☐

நாள் : 13.10.2025

பெறுநர்:

**செயலாளர்,**
தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : TNEBEF மாநில செயற்குழு தீர்மானம்**
**28.10.2025 கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டம்**
**15.11.2025 கோரிக்கைகளை வலியுறுத்தி தர்ணா - தெரிவித்தல் - தொடர்பாக.**

2025 செப்டம்பர் 27 மற்றும் 28 இருநாட்கள் திருச்சியில் நடைபெற்ற TNEBEF மாநில செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி,

> **"ஊதிய உயர்வு வேலைப்பளு பேச்சுவார்த்தை, ஒப்பந்த தொழிலாளர், பகுதி நேரப் பணியாளர் நிரந்தரம், கேங்மேன் பணியாளர்களுக்கு களஉதவியாளர் பெயர் மாற்றம், கடந்த ஊதிய உயர்வில் வழங்கப்படாத 6% ஊதிய உயர்வு, ஊர் மாறுதல், விடுபட்ட கேங்மேன் நியமனம் மற்றும் இதர கோரிக்கைகளை முன்வைத்து அக்டோபர் 4வது வாரத்தில் மின்வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலக வாயில்களில் கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டம் மற்றும் நவம்பர் இரண்டாவது வாரத்தில் சென்னையில் தர்ணா போராட்டம் நடத்திடுவது என இச்செயற்குழு ஏகமனதாக தீர்மானிக்கிறது."**

மேற்கண்ட தீர்மானத்தின்படி கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி **28.10.2025 மாலை 05:15 மணிக்கு அனைத்து மின்வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலக வாயில் முன் கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டம்** நடைபெற உள்ளது.

இக்கோரிக்கைகள் மீதான தீர்வுக்கு மேலும் காலதாமதமாகும் சூழ்நிலை தொடருமாயின் **15.11.2025 அன்று சென்னை தலைமை அலுவலகம் பின்புறம் தர்ணா நடைபெற உள்ளது** என்பதையும் தங்களின் மேலான கவனத்திற்கு தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

### கோரிக்கைகள்

1) **மின்சார வாரியத்தில் காலியாக உள்ள 65,000 பணியிடங்களையும் உடனடியாக நிரப்பிடுக.**
2) **OMCL (Overseas Manpower Corporation) மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்திட 22.07.2025ல் உத்தரவிட்டுள்ளதை நிறுத்தி வைத்திடுக.**

3) தமிழக அரசின் தேர்தல் வாக்குறுதிகளான ஒப்பந்த தொழிலாளர் நிரந்தரம், பழைய ஓய்வூதியம் திட்டம் கொண்டு வருதல் ஆகியவற்றை நிறைவேற்றிடுக.

4) கேங்மேன் பணியாளரை களஉதவியாளர்களாக பெயர் மாற்றம் செய்திடுக. ஊர் மாறுதல் விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் மாறுதல் உத்தரவு வழங்கிடுக

5) விடுபட்ட கேங்மேன் 5000 பேருக்கும் பணி நியமன உத்தரவு வழங்கிடுக.

6) 1.12.2023 முதல் வழங்கிட வேண்டிய ஊதிய உயர்வு வேலைப்பளு பேச்சுவார்த்தையை உடனடியாக தொடர்ந்து பேசி முடிவு காண்க. Class I & II அலுவலர்கள், பொறியாளர்கள் அனைவருக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கும் போதே சேர்த்து ஊதிய உயர்வு வழங்கிடுக.

7) கடந்த ஊதிய உயர்வில் 6% ஊதிய உயர்வு அளிக்காமல் உள்ள கேங்மேன் பணியாளர்கள் மற்றும் வாரிசு பணியாளர்களுக்கு வழங்கிடுக.

8) கணக்கீட்டாளரிலிருந்து கணக்கீட்டு ஆய்வாளர் பதவி உயர்வினை விரைவாக வழங்கிடுக.

9) நிர்வாக மேற்பார்வையாளர் பதவி உயர்வுக்கான தகுதிக்காண் பட்டியல் 108 நிர்வாக உதவியாளர்களுக்கு கேட்டுள்ளதை மேலும் 50 நிர்வாக உதவியாளர்களுக்கு சேர்த்து வெளியிடுக.

10) இளநிலை பொறியாளர் IIம் நிலையிலிருந்து Iம் நிலை (மின்னியல்) பதவி உயர்வுக்கான தகுதிக்காண் பட்டியல் வெளியிடுக.

11) இளநிலை பொறியாளர் (இயந்திரவியல் IIம் நிலை மற்றும் Iம் நிலை பதவி உயர்வுகள் வழங்கிடுக).

12) தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்) மற்றும் பண்டக சாலை காப்பாளர் IIம் நிலை உள்முகத் தேர்வு முடிவுகளை உடனடியாக வெளியிடுக.

13) வாரிசு வேலை விண்ணப்பங்களை பரிசீலனை செய்து பணி உத்தரவு வழங்குவதில் காலதாமதமாகுவதை தவிர்த்து விரைவாக வழங்கிடுக.

14) Health Insurance தற்சமயம் உள்ள கம்பெனியின் சேவை சரியானதாக இல்லை என்ற குற்றச்சாட்டு தொழிலாளர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் தரப்பில் அதிகம் உள்ளதால் மாற்று ஏற்பாடு செய்திடுக.

15) TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷனுக்கு விழுப்புரம் மின்வட்டம், காஞ்சிபுரம் மின்வட்டம், பெரம்பலூர் மின்வட்டம், புதுக்கோட்டை மின்வட்டம், திண்டுக்கல் மின்வட்டம், கடலூர், திருப்பூர் மின்வட்டம், பல்லடம் மின்வட்டம், MTPS & VGTPS மின்வட்டம் போன்ற இடங்களில் தொழிற்சங்க அலுவலகம் வழங்காமல் உள்ளதை உடனடியாக வழங்கிடுக.

16) Junior Assistant (Administration) & Technical Assistant (Mechanical) உள்முகத் தேர்வு செய்திடுக.

17) FSFS 3 லட்சத்திலிருந்து 5 லட்சமாக உயர்த்திய உத்தரவு அரசாணைப்படி 01.09.2021 முதல் வழங்கிடுக.

18) DGRG 20 லட்சத்திலிருந்து 25 லட்சமாக உயர்த்தி வழங்கிடுக.

(A. சேக்கிழார்)

பொதுச்செயலாளர்

★★★

நாள் : 07.11.2025

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : இயக்குதல் வட்டம் (Operation Circle) - ஓய்வு பெற்ற பொறியாளர்கள் - பணியமர்த்தல் - உத்தரவு - தொடர்பாக.**

**பார்வை : (Per) CH.TANTRANSCO Proceedingsz No. 192 Dt. 01.11.2025.**

பார்வையில் கண்டுள்ளபடி இயக்குதல் வட்டங்களில் உள்ள 765KV, 400KV, and 230KV துணை மின்நிலையங்களில் உள்ள காலியிடங்களில் ஓய்வு பெற்ற உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் ஆகியோரை துணை மின்நிலையங்களில் முறைப் பணியில் பணி செய்ய வைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

துணை மின்நிலைய இயக்குதல் பணிகளுக்கு ஓய்வு பெற்ற பொறியாளர்களைப் பயன்படுத்துவது என்பது நிரந்தரப் பதவிகளுக்குண்டான முக்கியத்துவத்தைக் குறைப்பது மட்டுமல்ல, ஆபத்து நிறைந்தவைகளான துணை மின்நிலையப் பணிகளுக்கு ஓய்வு பெற்றவர்களை பணிக்கமர்த்துவது என்று ஏற்புடையதல்ல, துணை மின்நிலையப் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து உதவி செயற்பொறியாளர்களை இவ்விடங்களில் பணியமர்த்திட வேண்டும். மேலும் குறிப்பாக புதிதாக அமைக்கப்பட்டுள்ள அனைத்து துணை மின்நிலையங்களும் வழங்காமல் உள்ள உரிய பதவிகளை அனுமதி வழங்கிட வேண்டும்.

எனவே, மேற்கண்ட உத்தரவினை நிறுத்தி வைத்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

★★★

நாள் : 07.11.2025

பெறுநர்:

**தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு),**
தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

அம்மா,

**பொருள் : உதவி வரைவாளர் (Assistant Draughtsmen) - உள்முகத் தேர்வு செய்திட வேண்டுதல் - தொடர்பாக.**

Diploma மற்றும் ITI Draughtsmen படிப்பு படித்துள்ளவர்கள் பல்வேறு பதவிகளில் மின்சார வாரியத்தில் பணியாற்றி வருகிறார்கள். உதவி வரைவாளர் பதவிக் காலியிடங்கள் நிறைய உள்ளது.

Draughtsmen படிப்பு படித்தவர்களை (ITI மற்றும் Diploma) உதவி வரைவாளர் (Assistant Draughtsmen) பதவிகள் காலியிடங்களில் பயன்படுத்திடும் வகையில் உள்முகத் தேர்வு செய்து படித்தவர்களுக்கு வாய்ப்பளித்திட வேண்டும்.

எனவே, தலைமைப் பொறியாளர் (பணியமைப்பு) அவர்கள் Assistant Draughtsmen உதவி வரைவாளர் பதவிக்கு, உள்முகத் தேர்வு (Internal Selection) செய்திட தகுந்த உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

★★★

## கடினமான பணிகளில் பெண்களை பயன்படுத்த விதிகளில் திருத்தம் செய்துள்ளதை கைவிட வலியுறுத்தி அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் தமிழக அரசுக்கு முறையீடு

நாள் : 04.11.2025

அனுப்புதல்:

**அனைத்து தொழிற்சங்கங்கள்**

1. அகில இந்திய தொழிற்சங்கப் பேராயம் (AITUC),
கே.டி.கே. தங்கமணி இல்லம்,
2/1, கோவூர் வைத்யநாதன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
Phone : 044-2845869/9486362703
Email:tnaituc@gmail.com
2. ஹிந்த் மஸ்தூர் சபா (HMS),
193B, ரயில்வே காலனி,
காந்தி இர்வின் ரோடு, எழும்பூர், சென்னை - 600 008.
Email: tnhms@hotmail.com
3. இந்திய தொழிற்சங்க மையம் (CITU),
27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை-600 005
Email: citutn@gmail.com
4. இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் (INTUC),
நெ. 18, எல்லியம்மன் கோவில் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-600 033. Cell : 9444496100
Email:tvzavier2712@gmail.com
5. அகில இந்திய ஐக்கிய தொழிற்சங்க மையம் (AITUC),
நெ. 43, நாராயணா மேஸ்திரி மெயின் தெரு,
ஓட்டேரி, சென்னை-600 012. Cell : 9551554491
Email: v.sivakumar64@gmail.com

6. அகில இந்திய தொழிற்சங்க மய்யக் கவுன்சில் (AICCTU),
3/254, B. ஜீவா தெரு,
வண்டலூர், சென்னை-600 048
Email:aicctutamilnadu@gmail.com

7. ஐக்கிய தொழிற்சங்க காங்கிரஸ் (UTUC),
39/101, சிங்கண்ண தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-600 002
Mob : 9841446621/9092268200
Email:tnutuc64@gmail.com

8. தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மையம் (TUCC)
தரைதளம், 8A, 6ஆவது மையின் ரோடு,
ஜவஹர் நகர், சென்னை - 600 082

9. உழைக்கும் மக்கள் தொழிற்சங்க மாமன்றம் (WPTUC),
5, டாக்டர் வாசுதேவன் தெரு,
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010
Email: wptuc.rk@gmail.com

10. மறுமலர்ச்சி தொழிலாளர் முன்னணி (MLF),
No. 3, கோவிந்தராஜுலு தெரு,
ஸ்ரீதேவி நகர், ஆவடி, சென்னை-600 071
Email:andhriodoss@gmail.com

11. தொழிலாளர் விடுதலை முன்னணி (LLF),
இலக்கம் 52/36, பஜனை கோவில் தெரு,
மங்களபுரம், அம்பத்தூர், சென்னை - 600 098
Cell : 90033 71283
Email:llf.Perarivalan@gmail.com

பெறுதல்:

1. தலைமைச் செயலாளர் அவர்கள்,
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.

2. அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை,
தலைமைச்செயலகம், சென்னை-600 009.

3. இயக்குநர் அவர்கள்,
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
47/1, திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை-600 032

ஐயா,

**பொருள் : பெண்கள் பணிபுரிய தடை விதிக்கப்பட்ட 20 அபாயகரமான தொழில்களில், கருவுற்றவர்கள் தவிர்த்த மற்ற பெண்களை அனுமதிக்கும் வகையில் 1950ஆம் ஆண்டு**

**தமிழ்நாடு தொழிற்சாலை சட்ட விதிகளில் திருத்தம் செய்ய வெளியிடப்பட்டுள்ள அரசு அறிவிக்கை. எங்களது ஆட்சேபனையைத் தெரிவித்தல். திருத்தத்தை முற்றிலுமாக கைவிடக் கோருதல் - தொடர்பாக.**

**பார்வை : *1.10.2025* தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழில் No. 39, part III-section 1(a)- வெளியிடப்பட்டுள்ள அரசு அறிக்கை.**

தமிழ்நாடு தொழிற்சாலை விதிகளில் மேற்கொள்ளப்பட்ட இருக்கிற திருத்தம் சம்பந்தமான அறிவிக்கையை அரசிதழில் பார்த்தோம்.

மிக முக்கியமான திருத்தங்களை மேற்கொள்ளும் போது, தொழிற்சங்கங்களோடு கலந்து பேசும் நடைமுறை முன்னர் இருந்தது. இந்தத் திருத்தம் முன்மொழியப்படும் முன்பு தொழிற்சங்கங்களிடம் கலந்து பேசாதது மிகுந்த கவலையும் ஏமாற்றமும் அளிக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக மாநிலத்தின் உயர்மட்ட முத்தரப்பு அமைப்பான மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம் கூட்டப்படவே இல்லை. இது ஆரோக்கியமான முத்தரப்பு உரையாடலையும் ஒருமித்த கருத்து உருவாக்கும் வாய்ப்பையும் ஒட்டுமொத்தமாக தடுத்துவிட்டது என்பதை உங்களது மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

மேற்சொன்ன எங்களது தொடக்கநிலை மறுப்புக்கு (Preliminary Objections) தீங்கில்லாமல், வரைவு விதித் திருத்தங்கள் குறித்த எங்களது எதிர்நிலைக் கருத்துக்களை முன் வைக்கிறோம்.

மின்னாற்பகுப்பு, கண்ணாடி உற்பத்தி, ஈயம் தொடர்பான தொழில்கள், எரிவாயு மற்றும் பெட்ரோலியம் உற்பத்தி, கிராஃபைட்டை பொடி செய்தல், புற்று நோயைத் தோற்றுவிக்கும் டைக்ரோமேட்டுகள், சாய உற்பத்தி, பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் ரசாயனங்களை கலக்கும் வேலை, மாங்கனீசு உற்பத்தி, ஆபத்தான பூச்சிக்கொல்லிகள் மற்றும் உர உற்பத்தி, பென்சீன் வாயு தொடர்புடைய தொழில்கள், மேலதிக ஓசை மற்றும் அதிர்வுள்ள பணி நிலைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைப் பகுதிகளில் பெண்கள் பணிபுரிவதற்கு கடந்த 75 ஆண்டுகளாக தடைவிதிக்கப்பட்ட விதிகளில், இப்போது திருத்தம் கொண்டு வருவதற்கான காரணம் என்ன என்பதைப் பற்றி அரசு அறிவிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

மேற்சொன்ன நச்சு வாயுக்கள், பூச்சிக்கொல்லிகள், அல்லது ஈயம் (Lead) சார்ந்த ரசாயன தொழிற்சாலைப் பிரிவுகளில் பணிபுரியும் பெண்களுக்கு பலவிதமான உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவை குறுகிய காலத்திலும் நீண்ட காலத்திலும் தீவிர விளைவுகளை உண்டாக்குகின்றன என்று மருத்துவ அறிவியல் கூறுகிறது.

அவை பின்வருமாறு:

1. **நரம்பு மண்டல பாதிப்பு:** தலைவலி, மயக்கம், நினைவிழப்பு, மனஅழுத்தம், கை, கால் நரம்புத் தளர்ச்சி, கைகள்/கால்களில் தூக்கல் உணர்வு நீண்ட காலத்தில் மூளை சேதம் ஏற்படும் அபாயம்.
2. **சுவாச மண்டல நோய்கள்:** இருமல், மூச்சுத்திணறல், சளி, ஆஸ்துமா, நீண்டகாலப் பணியில் நுரையீரல் வீக்கம், நிலையான சுவாச நோய்.
3. **இரத்தம் மற்றும் எலும்பு தொடர்பான பாதிப்புகள்:** இரத்தசோகை (ஈயம் ஹீமோகுளோபின் உற்பத்தியைத் தடுக்கிறது), எலும்பு வலி, தளர்ச்சி, எலும்பு பலவீனம், லேக்கிமியா போன்ற இரத்தப் புற்றுநோய் அபாயம்.

4. **ஹார்மோன் மற்றும் மாற்றுச்சத்து சீர்கேடு:** தைராய்டு குறைபாடு, உடல் எடை மாற்றம், ஹார்மோன் சமநிலை குலைவு, மனநிலை பாதிப்பு.
5. **தோல் மற்றும் வெளிப்புற பாதிப்புகள்:** தோல் எரிச்சல், சிவப்பு, அலர்ஜி, புண்கள், முடி உதிர்வு, நக மாற்றங்கள்.
6. **இதயம், சிறுநீரகம் தொடர்பான பாதிப்புகள்:** உயர் இரத்த அழுத்தம், சிறுநீரக சேதம், உடல் வீக்கம்.
7. **புற்றுநோய் அபாயம்:** மார்பக, நுரையீரல், கருப்பை புற்றுநோய், நீண்டகால ரசாயனத் தாக்கத்தால் அபாயம் அதிகம்.
8. **மனஅழுத்தம் :** மனஅழுத்தம், தூக்கமின்மை, மனநலம் பாதிப்பு எல்லாவற்றுக்கும் மேலாக.
9. **இனப்பெருக்க மற்றும் மாதவிடாய் பிரச்சினைகள்:** மாதவிடாய் தடுமாற்றம், கருப்பை நோய்கள், கருத்தரிப்புத் திறன் குறைவு, கருக்கலைவு, குழந்தைகளில் பிறவிக் குறைபாடுகள், மூளை வளர்ச்சி குறைவு.

75 ஆண்டுகளுக்கு முன்பு, தொழிற்சாலைகளில் ரசாயனங்கள் உற்பத்தி செய்யப்பட்டதைவிட தற்போது வீரியமிக்கதாகவும், அளவு மிகுந்ததாகவும் தான் உள்ளன. தொழிற்சாலை சூழல் குறித்து தொழிற்சாலை ஆய்வாளர்கள் ஆய்வு நடத்துவதும் மிகப் பெரும் அளவில் குறைந்துவிட்டது. ‘இன்ஸ்பெக்டர் ராஜ்’ என்ற பெயரில், புகார் வந்தால் தவிர, குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்ய வேண்டியது இல்லை என்ற அணுகுமுறை கையாளப்படுகிறது. வேலை அளிப்பவர்கள், ‘தொழிற்சாலை வேலைகள் விதிகள் அனைத்தும் சரியாக கடைப்பிடிக்கப்படுகின்றன’ என சுய சான்றிதழ் அளித்தால் போதுமானது என்ற நிலை வந்துவிட்டது.

இதற்கு நேர்மாறாக, தமிழ்நாட்டு பெண்களிடையே இரத்த சிவப்பணுக்கள் பற்றாக்குறை மிகுந்து, ரத்தசோகை அதிகரித்து வருகிறது. குழந்தை பிறக்கும் விகிதத்தை குறைக்க, குடும்பக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என்று அரசு மக்களிடம் வலியுறுத்திய காலம் அகன்று, குழந்தை பெற்றுக் கொள்ளுமாறு பேசும் காலம் வந்துவிட்டது. வீட்டுக்கு நான்கு ஐந்து குழந்தைகள் ருந்த நிலை மறைந்து, ஒரு குழந்தையை பெற்றுக் கொள்வதற்கு கருத்தரிப்பு நிலையங்களை நாட வேண்டிய சூழல் பெண்களுக்கு வந்திருக்கிறது.

இந்நிலையில், மாதவிடாய் தடுமாற்றம், கருப்பை நோய்கள், கருத்தரிப்புத் திறன் குறைவு, கருக்கலைவு, குழந்தைகளில் பிறவிக் குறைபாடுகள், மூளை வளர்ச்சி குறைவு ஆகியவற்றை உருவாக்கும் தன்மை படைத்த ரசாயன தொழிற்சாலைகளில் பணிபுரிய விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்குவது என்ற முடிவுக்கு வந்தது எந்த வகையிலும் பொருத்தமானது அல்ல.

மேலும் இதில் கருவுற்ற பெண்களை பற்றி மட்டும் கூறப்பட்டுள்ளதே தவிர, மகப்பேற்றுக்குப் பின் உடனடியாக அவர்கள் பணிக்கு திரும்புதலும், குழந்தைகளுக்கு பாலூட்டும் காலத்திலும் நச்சு வேதியல் பொருள்களை கையாள நிர்பந்தப்படுத்துதலும் கருவுற்ற காலத்தைவிட மோசமானவை என்பதை இந்த திருத்தம் கவனிக்க மறுக்கிறது.

அந்த வேலைகளில் பெண்களை ஈடுபடுத்தும், முன்பு ஒப்புதல் கையொப்பம் பெற வேண்டும் என்ற நிபந்தனை விதித்து இருப்பதால், அந்தப் பெண் தொழிலாளர்கள் தாமாக தங்கள் சொந்த விருப்பத்தின் அடிப்படையில் பணிக்கு செல்வதுபோல ஒரு மாயத் தோற்றம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

நிரந்தர தொழிலாளர் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டு, காண்ட்ராக்ட், அவுட்சோர்ஸ் முறைகளில் தொழிலாளர்கள் பணிக்கு அமர்த்தப்படுகின்றனர். பணிப் பாதுகாப்போ, ஊதியப் பாதுகாப்போ இல்லாத சூழலில், எந்த நேரமும் வேலையில் இருந்து விலக்கப்படும் அபாயத்தை எதிர்நோக்கி இருக்கிறார்கள். இந்தப் பணிகளில் வேலை செய்ய ஒத்துக்கொண்டு கையெழுத்திடாவிட்டால், வேலையை விட்டு விலக்கப்படுவோம் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும் நிரந்தரமற்ற தொழிலாளர்களை தொழிற்சங்கம் பிரதிநிதித்துவப்படுத்துவதும் கடினமாக உள்ளது. அபாயகரமான பணியைச் செய்ய தனது விருப்பமின்மையை வெளிப்படுத்தவே வாய்ப்பு இல்லாத நிலையில் தான் பெண் தொழிலாளர்கள் வைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சூழலில் அவர்களிடம் கையெழுத்து பெறுவது என்ற நிபந்தனை வெறும் கண்துடைப்பானது மட்டுமே.

மற்ற தொழிற்சாலைகளில் பெண் தொழிலாளர்களை இரவுப் பணியில் ஈடுபடுத்த, அவர்களின் ஒப்புதல் பெற வேண்டும் என்ற நிபந்தனையும் மேற்சொன்ன காரணங்களால் உள்ளீடற்றதாகவே உள்ளது.

இந்த வேலைகளில் பங்கேற்க முடியாத சூழ்நிலைகளில் உள்ள பெண்கள் அவற்றில் கட்டாயப்படுத்தப்படாமல் இருப்பதையோ அல்லது அவ்வாறு செய்யாததற்காக தண்டிக்கப்படாமல் இருப்பதையோ உறுதி செய்யும் அளவுக்கு தொழிலாளர் துறை, ஆய்வக துறை ஆகியவற்றின் செயல்பாடு அமையவில்லை என்பதே கடந்த 30 ஆண்டு கால அனுபவமாகும் என்பதை, பொறுப்புள்ள தொழிற்சங்கங்கள் என்ற முறையில் தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

அபாயகரமான தொழில்களில் பெண்களை நியமிக்க வகை செய்வதை, முற்போக்கானது, பெண் விடுதலைக்கானது என்று சித்தரிக்க முயல்வது தவறான அணுகுமுறை ஆகும். பெண்களின் உடல் நிலைக்கும், எதிர்கால சந்ததிக்கும் பெருந்தீங்கு ஏற்படுத்தும் இந்த முயற்சி, கார்ப்பரேட் நலன்களை மட்டுமே முன் நிறுத்துகிறது. பெண்களின் நலன்களை பாதுகாப்பதில் அரசுக்கும், சமூகத்திற்கும் பொறுப்புள்ளது.

எனவே, அரசு அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்சாலை விதித் திருத்தங்களை முற்றிலுமாக கைவிட வேண்டும் என்று அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பாக தமிழ்நாடு அரசையும், அதன் தொழிலாளர் நலன் மற்றும் திற்ன மேம்பாட்டு துறையையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

**ம.இராதாகிருஷ்ணன்**
பொதுச்செயலாளர்,
தமிழ்நாடு **AITUC**

**க.அ.ராஜாஸ்ரீதர்**
தலைவர்,
**HMS**

**ஜி.சுகுமாறன்**
பொதுச்செயலாளர்
**CITU** தமிழ்மாநிலக்குழு

**டி.வி. சேவியர்**
பொதுச்செயலாளர்
**INTUC** தமிழ்நாடு

**வி.சிவகுமார்**
மாநில பொதுச்செயலாளர்
**AIUTUC**

**க.ஞானதேசிகன்**
மாநில பொதுச்செயலாளர்
**AICCTU**

**அ.சேக்கிழார்**
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு **UTUC**

**எஸ்.மாயாண்டி**
இணைச்செயலாளர்
தமிழ்நாடு **TUCC**

**இரா.குசேலர்**
தலைவர்
**WPTUC**

**இரா.அந்திரிதாஸ்**
பொதுச்செயலாளர்
**MLF**

**க.பேரறிவாளன்**
மாநில அமைப்பாளர்
**LLF**

# மத்திய தொழிற்சங்கங்கள் ILOவிற்கு எழுதியுள்ள கடிதம்

30th October 2025

To,
**The Director General**
International Labour Organisation (ILO)
ILO Office, ILO Head Quarters,
Geneva, Switzerland

Sir,

**Sub: Representation under Article 24 of ILO Constitution from Joint Platform of 10 Central Trade Unions/ Workers Organisations (CTU's) regarding Non&Compliance of Convention 144 Recommendation 152 by the Member State - INDIA.**

The Joint Platform of ten major Central Trade Unions (CTU's), from the member state INDIA submit the following on the above subject in accordance with the Article 24 of ILO Constitution;

1) Resolution of the 113th ILC on Second World Summit for Social Development 2025 has advised all Member States, who hold the primary responsibility for their social development, to hold consultation with employers' and workers' organizations, to ensure the appropriate involvement of employers' and workers' organizations in the preparations for, conduct of, and follow-up to the Summit by:

   (a) involving these organizations in national preparations for Summit and in the implementation of its outcome;

   (b) considering the inclusion of representatives of employers' and workers' organizations as advisers in the national delegations to the Summit;

   (c) considering the practical arrangements for the effective participation of representatives of employers' and workers' organizations in the Summit; and ensure that the outcome of the Summit takes full account of the tripartite key messages. (Record of Proceedings 2D, 19.6.2025 Reports of General Affairs Committee-113th ILC).

2) In adherence to and persuasion of above decision/resolution of 113rd ILO Conference the Joint Platform of following ten Central Trade Unions (CTU's), representing overwhelming majority of recognised workers organisations have written a joint letter dated 12th July 2025 and requested the Hon'ble Minister for labour Employment, Govt of India to initiate the consultative meeting on the contents and agenda of the World Summit and to include workers organisations as advisors in the delegations to2nd World Summit for Social Development.

3) The Government of India, a member state of ILO has not held any sort of consultative meetings with the workers organisations despite persuasion, or involved the workers

organisations in any form in the national preparations for Summit. None of the concerned majority segments of the workers organisations are included as advisers in the national delegations to the summit.

4) INDIA, Member State of ILO has ratified Convention 144 Tripartite Consultation (International Labour Standards) Convention 1976 Recommendation 152 Tripartite Consultation (Activities of the ILO) Recommendation, 1976.


5) As per the Convention 144, INDIA as a member State has to comply with it and hold tripartite Consultations and Paragraph 6 (b) of Recommendation 152 of 1976 envisages the possible extension of consultation to the action to be taken in respect of resolutions and conclusions adopted by the ILC.

6) The no adherence of the advisory of the resolution of the 113th ILC, to which INDIA is also a party amounts to non-compliance of the ratified convention by the Govt of India.

Hence on behalf of the undersigned workers organisations we submit this Representation under Article 24 of ILO Constitution and seek the intervention of ILO office for necessary actions, to ensure the compliance of ILO Convention and Resolutions by INDIA.



**INTUC** **AITUC** **HMS** **CITU** **AIUTUC**



**TUCC** **SEWA** **AICCTU** **LPF** **UTUC**

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான ‘‘எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்’’-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**

**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**

39/101, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.

**✆ : 9841446621 ✆: 8939152361**

**tnebemployeesfederation3600@gmail.com**

**குறிப்பு :** செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.

## TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷனுக்கு ஊதியத்தில் போனஸ் நன்கொடை பிடித்தம் செய்ததை நிறுத்திட வேண்டுகோளை ஏற்று மின்வாரியம் உத்தரவு

**Tamil Nadu Power Distribution Corporation Limited**
**(erstwhile TANGEDCO)**

Secretariat Branch,
N.P.K.R.R. Maaligai,
144, Anna Salai,
Chennai - 600 002.

**Memo. (Per). No. 49365/A16/A161/2025-2, Dated : 08.11.2025**

Sub : TNPDCL - Union - Tamil Nadu Electricity Board Employees Federation (Reg. No. 366/CNI) - The scheme of deduction of annual donation from the salary of the willing members of the Union - Cancellation - Orders - Issued.

Ref : 1. (Per) B.P.(Ch) No. 111 (SB) dated : 09.05.2007.
2. Secretariat Branch Memo. (Per.) No. 34915/A3/A31/2020-4, dated : 10.08.2021.
3. Secretariat Branch Memo (Per. )No. 34174/A3/A31/2021-1, dated : 07.10.2021.
4. From the General Secretary/Tamil Nadu Electricity Board Employyes Federation (Reg. No. 3600/CNI), Letter dated : 02.09.2025.

In the Board's Proceedings first cited, detailed guidelines were issued for deduction for Annual union subscription and donation from the salary of the willing employees with the standard terms and conditions annexed to the Board Proceedings and ordered that the subscription shall be deducted from the pay bill for May payable in June and donation shall be deducted from the pay bill for November payable in December every year. In the Memo second cited, orders were issued for deduction of Annual Subscrption/Donation from the willing employees of their union for every year and also ordered that the willingness of the members who made specific request for deduction of Annual Subscription / Donation to the Pay Drawing Officer before 15th May of a year for a Union shall be in force for three years. After that, the emplolyees should renew their request to the Pay Drawing Officer to deduct. Annual Subscrpition /Donation to their unions.

2. Accordingly, the Tamil Nadu Electricity Board Employees Federation has been permitted to deduct sum of Rs. 200/- towards Annual donation from the willing memers of their union from the salary for the month of November payable in December vide in the reference 3rd cited.

3. Now, the General Secretary/Tamil Nadu Electricity Board Employees Federation (Reg. No. 3600/CNI), has requested to withdraw from the scheme of deduction of Annual donation from the willing members of their Union.

4. After detailed examination, the request of General Secretary / Tamil Nadu Electricity Board Employees' Federation (Reg. No 3600/CNI) to withdraw from the scheme of deduction of Annual donation from the salary of the willing members of their Union has been accepted and it is hereby ordered that no donation need be deducted from their members from 2025 onwards.

**J. RADHAKRISHNAN**
**Chairman and Managing Director**

# சிறப்பு டாக்டர் சிரிப்பண்ணா

உடுமலை **R. சக்திவேலு,** மாநில உப தலைவர்

இன்றைய சமுதாயச் சூழ்நிலை காரணமாக, குடும்பத்தாரிடமும், நண்பர்கள், அதிகாரிகள், வெளிநபர்கள் என அனைவரிடத்திலுமே நகைச்சுவை உணர்வு மங்கி சிரிப்புக்குப் பெரும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. வேலைக்குச் செல்லும் கணவன் மனைவிக்கு வேலைப்பளு, போக்குவரத்து நெரிசலுடன் எரிச்சல், வருமானத்துக்கும் அதிகமான திட்டங்கள் ஆகியவற்றாலும் வீட்டிலே முடங்கிக் கிடக்கும் வயதானவர்களுக்கு முதுமை, நோய், எதிர்பார்ப்புகள், மரியாதை இன்மை, பாசத்துக்கு ஏங்குதல் போன்றவற்றாலும், குழந்தைகளுக்கோ பள்ளிப்பாடம், வீட்டுப்பாடம், தனிப்பயிற்சி போன்றவற்றாலும் மனதும், முகமும் இறுக்கமாக மாறி சிரிப்பென்றால் என்ன விலை என்று கேட்கும்படி உள்ளது.

குடும்பவிழா விருந்து போன்ற நிகழ்ச்சிகளின் போதுகூட உறவினர்களிடையே -போட்டி, பொறாமை, ஆணவம், கர்வம் மட்டுமே மேலோங்குகிறதே ஒழிய கேலியும் கிண்டலும், மகிழ்வுடன் கூடிய சிரிப்பு எனும் மா மருந்து மறைந்தேவிட்டது எனலாம்.

காலையில் எழுந்தது முதல் உறங்கச் செல்லும் வரை உங்கள் குடும்பத்தார் வெளியே சந்திக்கும் நண்பர்கள் வெளியாட்கள், பேருந்து, ரயில் பயணிகள், வங்கி, பள்ளி, அலுவலகங்களிலே பணிபுரிவோர், வர்த்தக நிறுவனங்கள் என எத்தனைபேர் உதடுகளை திறந்து புன்னகை செய்கிறார்கள் என்பதை விரல் விட்டு எண்ணிப் பாருங்கள். காலையில் மூடிய கைவிரல்கள் இரவு வரை மூடியே இருக்கும் என்பதே உண்மை நிலை. சிரிப்புக்கு அந்த அளவு கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது.



இந்திய அரசியலில் முக்கிய தலைவராக இருந்த ஒருவர் சிரிக்கவே மாட்டார் எனவும், எப்போதாவது அவர் லேசாகப் புன்னகை செய்தாலே அது செய்தித் தாள்களில் முக்கிய செய்தியாக வந்ததையெல்லாம் அறிவோம்.

இன்றைய கால கட்டத்தில் குறிப்பாகப் பெண்களை சிரிக்கவே கூடாது என தடை போட்டுள்ளதாகவே கருத வேண்டும்.

*''பொம்பளை சிரிச்சா போச்சு*
*புகையிலை விரிச்சா போச்சு''*

என்னும் பழமொழியின் உண்மையான அர்த்தம் தெரியாமல் அனர்த்தமாகப் பொருள் கூறிக்கொண்டு பெண்கள் சிரிக்கவே கூடாது என்று கூறிவருகிறோம்.

எந்த ஒரு பொழுதுபோக்குமில்லாத அந்தக் காலங்களில், ஒருவித மன இறுக்கத்தோடு வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கும் பெண்கள் வெளியே வந்து நகைச்சுவை நிகழ்ச்சிகளைக் கண்டு களித்து மன மகிழ்வோடு சிரிக்கும் போது, அவர்களின் மன இறுக்கம் போய்விடுமெனவும், அதே போல புதை குழிக்குள் பல நாட்கள் போட்டு மூடி வைத்திருக்கும் புகையிலையின் கெட்ட வாயு வெளியே எடுத்து சிறிது விரித்தால் போய்விடும் என்பதற்காகவும் சொன்னதை,

பெண்களைச் சிரிக்க விடாமல் போட்ட ''தடா'' சட்டமாக பயன்படுத்துகிறார்கள்.

இப்போக்கு மாறி, ஒருவரோடொருவர் நட்பை வளர்க்க இடைவெளியை குறைக்க, நெருக்கமாகப்பழக மன இறுக்கத்தைக் குறைக்க மனத்தெளிவு பெறவும் நம்மிடையே பொறுமை அதிகரிக்கவும், நண்பர்கள் குடும்பத்தாருடன் தனித் தோற்றத்துடன் விளங்கவும், எப்படிப் பட்ட சூழ்நிலையையும் சமாளிக்கக் கூடியது மான சிரிப்பெனும் அருமருந்தைத் தினமும் பருகி மகிழ்வோடு வாழ முயற்சிப்பது மிக அவசியம்.

மனிதனுக்குச் சிரிக்கும் உணர்வு இருந்தால் மனதில் தைரியத்துடன், எத்தகைய கொடிய துன்பத்தையும் துரத்த முடியும். உங்களால் சிரிக்க முடிகிறது என்றால் நல்ல தெளிவான மன நிலையில் இருக்கிறீர்கள் என அர்த்தம். எனவே உடல்நலம் தருகிற செல்வம் தருகிற, சிரிப்பை ஏன் நீங்கள் மறக்க வேண்டும்? சிரிக்கத் தயங்காதீர்கள், வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் சிரியுங்கள் மற்றவர்களையும் சிரிக்க வையுங்கள். வாய்விட்டு மனம் விட்டு

இதை உணர்ந்த நமது முன்னோர்கள் முற்காலத்தில் கிராமப்புறங்களில் நகைச் சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து விகடகவி, பபூன் கோமாளி போன்றவர்களை உருவாக்கிய தோடு தெருக்கூத்து, கும்மி, ஒயிலாட்டம், கரகாட்டம் போன்ற விளையாட்டுக்கள் மூலமாகவே சிரித்து மகிழ்ந்தனர்.

நகைச்சுவை உணர்வு ஊட்டிய கலைவாணர் NSK-வின் மாறுபட்ட பல்வேறு சிரிப்பு வகைகள் இன்றும் சிரிக்க வைக்கும். தொடர்ந்து டனால் தங்கவேல், சந்திரபாபு, கவுண்டமணி, செந்தில், நாகேஷ், வடிவேலு, சந்தானம் என்று மக்களுக்கு சிரிப்பு டானிக் தரும் பட்டாளமே இருந்து வருகிறது.

போதாதற்கு நகைச்சுவை பட்டிமன்றங் களில் சாலமன்பாப்பையா, லியோனி போன்றவர்களால் அள்ளித் தெளிக்கும் நகைச்சுவை விருந்தும் நடைபெறுகிறது.

வெறும் அங்க சேஷ்டையால் மட்டுமே விலா நோகச் சிரிக்க வைத்த ''லாரல் அன்ட் ஹார்டி'' ''சார்லஸ் ஸ்பென்சர்'' என்னும் ''சார்லி சாப்ளின்'' போன்றவர்களை நினைத்தாலே சிரிப்பு வரும்.

குழந்தைகள் தொலைக்காட்சியில் விரும்பிப் பார்க்கும் ''போகோ சேனலில்'' Mr. பீன் என்னும் நிகழ்ச்சியில் அமெரிக்க பொறியாளரின் அங்க சேஷ்டைகள் குழந்தை களை மட்டுமல்ல, வயதானவர்களையும் சிரிக்க வைக்கும்.

இவ்வளவு அருமையான சிரிப்பு நம்மிடையே தற்போது மறைந்துவிட்டதால், படிப்பு மூலமாவது கற்றுத்தரலாம் என்று சிரிப்புக்கென்றே ஜெலோடோஜிஸ்ட்'' என்னும் படிப்பை ஆரம்பித்துள்ளார்கள்.

1955-ல் டாக்டர் கடாரியோ என்பவரால் சிரிப்புக்கென்றே ஒரு யோகா இயக்கம் துவங்கப்பட்டது.

மனதுக்கும் சிரிப்புக்கும் உள்ள தொடர்பு குறித்து ''சிக்மண்ட் பிராய்டு'' என்பரால் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரையே ''சிரிப்பு சிகிச்சைக்கு அஸ்திவாரமானது.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தை சேர்ந்த டாக்டர் முகுந்த் மேத்தா என்பவரால் மருந்து, பணம், கருவி ஏதுமில்லாத ''சிரிப்பு சிகிச்சை'' (Laughter Therophy) முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தச் சிரிப்பு சிகிச்சை 1. அட்டஹாஸ்யா, 2. மௌனஹாஸ்யா, 3. அஸ்வஹாஸ்யா என மூவகைப்படும்.

1. அட்டஹாஸ்யா இயல்பாக நன்கு வாயைத்திறந்து, சற்று குனிந்து, இருகைகளையும் விரித்து, நிமிர்ந்தவாறே அடிவயிற்றிலிருந்து மனம் விட்டு சிரிப்பதாகும்.

2. மௌனஹாஸ்யா வாயை மூடிக்கொண்டே உள்ளுக்குள்ளேயே மௌனமாக, வயிற்றுப்பகுதி மட்டும் மேலும் கீழுமாக நன்கு குலுங்கும்படி சிரிப்பதாகும். இதனை "Internal Jogging" என்று கூறுவர்.

3. அஸ்வஹாஸ்யா அஸ்வம் என்றால் குதிரை. குதிரை கணைப்பதைப்போல வாயைத் திறந்து, தொண்டையில் இருந்து வெடிச் சிரிப்பாகத் துவங்கி, அதிக சத்தமின்றி சிரிப்பதாகும்.

இந்த மூன்று வகைச் சிரிப்பு சிகிச்சைக்கு முன்பாக, இரு கைகளையும் தலைக்கு மேலே உயர்த்தி கைகளை முன்னும் பின்னும் அசைத்தபடி ‘‘ஹா..ஹா’’ எனவும் ’’ஹோ...ஹோ’’ எனவும் சத்தமாக ஏழுமுறை சொல்ல வேண்டும். ஒவ்வொரு பயிற்சிக்கு முன்பும் இதுபோல "WARMUP" செய்து, பயிற்சியை ஐந்து முறை செய்து முடித்து, சிறிது ஓய்வெடுத்து அடுத்தடுத்த பயிற்சிகளை இதேபோல் தினமும் செய்திட வேண்டும்.

இப்பயிற்சியை நாம் தனியாகச் செய்ய வெட்கப்பட்டால், காலையில் நடைப்பயிற்சிக்கு வரும் நண்பர்களை வட்டமாக நிறுத்தி இப் பயிற்சியைச் செய்யலாம். இப்பயிற்சி நாளடைவில் குடும்பத்தார் நண்பர்கள் என பரவுவதை அறியலாம்.

இவ்வாறு இருகைகளையும் தட்டிச் சிரிப்பதால் இதயம், ஈரல், சிறுநீரகங்களுடன் தொடர்புடைய கை நரம்புகள் தூண்டப்பட்டு பல நோய்கள் குணமாகின்றன. புற்றுநோய் கூட குணமாவதாக தைவான் நாட்டின் ஆராய்ச்சி முடிவு தெரிவிக்கிறது.

நமது ரத்தநாளங்கள் 20மி.மீ குறுக்களவு மட்டுமே உள்ளதால் சிரிக்காமல் டென்சனாக உள்ள நேரங்களில் அட்ரீனலின், கார்பசால் போன்றவை சுரந்து அடைப்பு ஏற்படக் காரணமாகிறது. மாறாக மனம்விட்டு சிரிக்கும் போது, எண்டார்பின், மெலப்டோனின், செரட்டோனின் போன்றவை சுரந்து, HDL என்ற நல்ல கொழுப்பு உருவாகி, நோய் எதிர்ப்பு சக்தியைத் தந்து நோயே வராமல் தடுக்கிறது.

நாம் கோபப்படும்போது, 68 தசைகள் இறுக்கமாகி, மூட்டுவலி, தசைவலி போன்றவை ஏற்படுகின்றன. அதே வேளையில் சிரிக்கும்போது 300 தசைகள் தளர்வு பெற்று, ‘‘என்சீபேலின்ஸ்’’ என்னும் ஹார்மோன் சுரந்து எல்லா தசைகளுக்கும் பாதுகாப்பு தருகிறது.

நுரையீரல்கள் நன்கு விரிவடைந்து ஆறுமடங்கு ஆக்ஸிஜன் உள்ளே சென்று ரத்தம் உடலெங்கும் பாய்ச்சப்பட்டு ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்த இதயம் வலுப்பெற்று துடிப்பு சரளமான நிலை ஏற்படுகிறது. மூளைக்கும் அதிக ரத்தம் செலுத்தப்பட்டு, மனதில் மகிழ்ச்சி, நினைவாற்றல் தெளிவான சிந்தனை, ஆகியவை ஏற்பட்டு மன இறுக்கம் அறவே குறைகிறது.

டைப் 2 சர்க்கரை நோய் உள்ளவர்கள் மனம் விட்டுச் சிரித்தால் சாப்பாட்டுக்கு பிறகு எகிறும் ‘‘குளுகோஸ்’’ குறைகிறது. சோகமான நிகழ்ச்சியை பார்த்தபிறகு அதிகமான சர்க்கரை, நகைச்சுவை நிகழ்ச்சியை பார்த்தவர்களுக்கு,

சர்க்கரை அளவு குறைந்ததாக மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனால்தான் நோயாளிகளுக்கு சிரிப்பு வீடியோக்களை மருத்துவர்கள் சிபாரிசு செய்கிறார்கள்.

குலுங்கி, குலுங்கிச் சிரிக்கும் போது நம் மூக்கில் உள்ள சளியில் ''இம்முனோ குளோபுலின்'' என்னும் புரதம் அதிகமாகச் சுரந்து, பாக்டீரியாக்கள், வைரஸ் மற்றும் புற்றுநோய் கிருமிகள் உடலில் உள்ளே புகாமல் தடுக்கின்றது.

வயிற்றுக்கும் மூச்சு உறுப்புகளுக்கும் இடையே உள்ள உதரவிதானம் மற்றும் தசைகள் பலப்பட்டு, கழுத்து, முகம் ஆகியவை புத்துணர்ச்சி பெற்று சுருக்கம் நீங்கி அழகை கூட்டுகிறது.

இருமல், சளி, ஆஸ்துமா, நீரிழிவு, இரத்த அழுத்தம், மூச்சுக் குழல் 'சம்மந்தப்பட்ட நோய்கள் நீங்குவதோடு சிந்திக்கும் திறன் கொண்ட மூளையின் வலப்பகுதி நன்கு செயல்பட உதவுகிறது.

ஊளைச்சதையைக் குறைத்து ஒளி படைத்த கண்கள் உறுதியான நெஞ்சம், களிப்புடன் கூடிய மன நிலை காரணமாக மனதில் பயம் அகன்று, மூளைக்கு அதிகமான சந்தோஷத்தை ஏற்படுத்துகிறது.

சிரிப்பே உலகின் மிகச்சிறந்த மருந்து என்பதே உண்மை. மனம் விட்டுச் சிரித்தால், புற்று நோய் கூட அண்டாது எனவும், நோய் எதிர்ப்பு சக்தியுடன் நீண்ட ஆயுளுடன் வாழலாம் எனவும் மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

எனவே இவ்வளவு அரும்பெரும் ''சிறப்பு டாக்டர் சிரிப்பண்ணா'' நம்முடன் இருக்கும் போது நாம் ஏன் வீணாகக் கவலைப்பட வேண்டும். சிரிப்போம், சிரிப்போம், சிரித்துச் சிரித்து மகிழ்வோம்.

மிருகத்திடமிருந்து மனிதனை வேறு படுத்திக் காட்டுவது சிரிப்பு மட்டுமல்லாமல். எல்லா உயிரினங்களிலும் சிரிக்கத் தெரிந்த உயிரினம் ''மனிதன்'' மட்டுமே.

''வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்'' சிரிப்பு என்பது வியாதிகளின் எதிரி, கவலைக்கும் சோர்வுக்கும் மாற்று மருந்து, செலவில்லாமல் மற்றவர்களுக்கு நாம் தரக்கூடியது புன்னகை ஒன்றே.

கஷ்டங்களை, சோகத்தை, மன இறுக்கத்தை, உளைச்சலை, முக இறுக்கத்தை சமாளிக்க சந்தோசமாக மனிதன் வாழ உதவும் மிகப்பெரிய வரப்பிரசாதம் ''புன்னகை'' ஒன்றே.

20 நொடிகள் மனம் விட்டு சிரித்தால் இருநிமிடங்கள் ஓடுவதற்கு சமம். சிரிப்பே சிறந்த உடற்பயிற்சி. இவ்வாறு சிரிப்பதால் மருத்துவ செலவு குறைந்து ஆயுள் கூடும். நோயும் விட்டு ஓடும். ஏனெனில் ஒருவரது சிரிப்பின் நீளமே அவனது ஆயுளின் நீளமாகும்.

நமது உள்ளத்தை திறந்து காட்டும் சிரிப்பை உதடுகளால் சிரிக்காவிட்டாலும் உள்ளத்தால் எப்போதும் சிரித்துக்கொண்டே இருப்போம். சிரித்து வாழ வேண்டும் ஆனால் பிறர் சிரிக்க வாழக்கூடாது என்பதை உணர்ந்து சிரிப்பெனும் அருமருந்தை தினந்தோறும் பருகி, நமது நண்பர் சிறப்பு டாக்டர் சிரிப்பண்ணாவுடன் இணைந்து நலம் பெற்று வளமுடன் வாழ்வோம்.

***''சிரிக்காத நாள் நம் வாழ்வில் மிகமிக வீணடிக்கப்பட்ட நாள் (அதர்வண வேதம்)***

□

# 2026ம் ஆண்டுக்கான விடுமுறை நாட்கள் - தமிழக அரசு அறிவிப்பு

©
Government of Tamil Nadu
2025

Manuscript Series

**PUBLIC (MISCELLANEOUS) DEPARTMENT**
**G.O.(Ms.) No. 708, Dated 11th November 2025**
விசுவாவசு, ஐப்பசி - 25,
திருவள்ளுவர் ஆண்டு 2056

**ABSTRACT**

Holidays - Public Holidays under Negotiable Instruments Act, 1881 for the State Governent Offices and all Commercial Banks including Co-operative Banks in Tamil Nadu for the year 2026 - Orders issued.

---

**Read:**

1. G.O.(Ms). No. 792, Public (Misc.) Department, dated 22.11.2024.
2. Reserve Bank of India letter No. CHN. HRMD.C3D. No. S851/03-02-091/2025-26, dated 27.06.2025.

****

**ORDER:**

The Government of Tamil Nadu pass the following orders in regard to the observance of Holidays in the State of Tamil Nadu for the year 2026:-

(i) **Public Holidays :** The Holidays declared under the Negotiable Instruments Act, 1881 (Cental Act XXVI of 1881) indicated in the notification appended to this order will be published in the Tamil Nadu Government Gazette.

(ii) **Government Holidays :** The Government direct that all the offices under the control of the Government of Tamil Nadu be closed on:-

(a) The dates specified in the notification appended to this order (except Annual Closing of Bank Accounts on 01.04.2026).
(b) All Saturdays and Sundays in the year 2026.

2. The above notified Public Holidays shall also apply to all State Government Undertakings / Corporations / Boards etc.,

**(BY ORDER OF THE GOVERNOR)**

**N. MURUGANANDAM**
Chief Secretary to Government

## Appendix

## Notification

` Under the "Explanation" to section 25 of the Negotiable Instruments Act, 1881 (Central Act XXVI of 1881) read with Notification of the Government of India, Ministry of Home Affairs, No. 20-25-26, Public-1, dated the 8th June 1957, the Government of Tamil Nadu hereby declares that, in addition to "Sundays' expressly defined as Public Holidays in the said "Explanation", the following days shall be Public Holidays for the year 2026.

## ANNEXURE

| Sl. No. | Public Holidays | Date | Day |
|---|---|---|---|
| 1. | New Year's Day | 01.01.2026 | Thursday |
| 2. | Pongal | 15.01.2026 | Thursday |
| 3. | Thiruvalluvar Day | 16.01.2026 | Friday |
| 4. | Uzhavar Thirunal | 17.01.2026 | Saturday |
| 5. | Republic Day | 26.01.2026 | Monday |
| 6. | Thai Poosam | 01.02.2026 | Sunday |
| 7. | Telugu New Year's Day | 19.03.2026 | Thursday |
| 8. | Ramzan (Idu'i Fitr) | 21.03.2026 | Saturday |
| 9. | Mahaveer Jayanthi | 31.03.2026 | Tuesday |
| 10. | *Annual closing of Accounts for Commercial Banks & Co-operative Banks | 01.04.2026 | Wednesday |
| 11. | Good Friday | 03.04.2026 | Friday |
| 12. | Tamil New Year's Day / Dr. B.R. Ambedkar's Birthday | 14.04.2026 | Tuesday |
| 13. | May Day | 01.05.2026 | Friday |
| 14. | Bakrid (Idul Azha) | 28.05.2026 | Thursday |
| 15. | Muharram (YTaom-E-Shahadath) | 26.06.2026 | Friday |
| 16. | Independence Day | 15.08.2026 | Saturday |
| 17. | Milad-un-Nabu (Prophet's Birthday) | 26.08.2026 | Wednesday |
| 18. | Krishna Jayanthi | 04.09.2026 | Monday |
| 19. | Vinayakar Chathurthi | 14.09.2026 | Monday |
| 20. | Gandhi Jayanthi | 02.10.2026 | Friday |
| 21. | Ayutha Pooja | 19.10.2026 | Monday |
| 22. | Vijaya Dasami | 20.10.2026 | Tuesday |
| 23. | Deepavali | 08.11.2026 | Sunday |
| 24. | Christmas | 25.12.2026 | Friday |

*Applicable only to Commercial Banks and Co-operative Banks in Tamil Nadu.

**N. MURUGANANDAM**
Chief Secretary to Government

// Forwarded / By Order //

**Section Officer**

# தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் கடிதம்

அனுப்புநர்
**மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்),**
மாவட்ட ஆட்சியரகம்,
தேனி - 625531.
மின்னஞ்சல்: paacthem@gmail.com

பெறுநர்
1. சார் ஆட்சியர், பெரியகுளம்
2. வருவாய் கோட்டாட்சியர், உத்தமபாளையம்
3. வட்டாட்சியர்/தனிவட்டாட்சியர், தேனி/ஆண்டிபட்டி/பெரியகுளம்/போடிநாயக்கனூர்/ உத்தமபாளையம்

நாள்: 03.0.2025.

ஓ.மு.எண். 15145/2025/இ3

ஐயா/அம்மையீர்,

**பொருள் : காப்பீட்டுத் தொகை - 2025-2026ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் அறிவிப்பில் அரசு ஊழியர்களின் சம்பளக் கணக்கை பராமரிக்கும் வங்கிகள் - சலுகைகளை அறிவித்துள்ளது - தொடர்பாக.**

**பார்வை : அரசாணை எண். 113 நிதி (கருவூலம் மற்றும் கணக்குகள்-III) நாள்: 14.05.2025.**

மாண்புமிகு தமிழ்நாடு நிதி அமைச்சர் 2025-2026ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதை பார்வையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் முக்கிய வங்கிகள் (SBI, IOB, IB, Canara, Axis, BOB மற்றும் UBI) தங்களிடம் சம்பளக் கணக்குகளை பராமரிக்கும் அரசு ஊழியர்களுக்கு பின்வரும் சலுகைகளை இலவசமாக வழங்க முன்வந்துள்ளன.

| வ.எண். | சலுகைகள் | காப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1. | அரசு ஊழியர் விபத்தில் மரணம் | 1 கோடி |
| 2. | அரசு ஊழியர் விபத்து காரணமாக நிரந்தர இயலாமை | 1 கோடி வரை |
| 3. | அரசு ஊழியர் இயற்கை மரணம் | ரூ. 10,00,000/- |
| 4. | விபத்தில் இறந்த அலுவலரின் திருமண வயதை எட்டியுள்ள மகள்களின் திருமண செலவுகளுக்கான நிதியுதவி | ரூ. 10,00,000/- வரை |
| 5. | விபத்தில் இறந்த அலுவலரின் மகன்/மகள்களின் உயர் கல்விக்கான உதவித்தொகை | ரூ. 10,00,000/- வரை |
| 6. | மற்ற சலுகைகள் | தத்தமது வங்கிகள் அறிவித்துள்ள சலுகைகள் |

எனவே, தங்களது நடப்பு வங்கிக் கணக்கினை இப்புதிய திட்டத்திற்கு மாற்றிக் கொள்வதற்கு தங்களது வங்கிக் கிளையில் வழங்கும் படிவத்தினை பூர்த்தி செய்து இத்துடன் பின்வரும் நகல்களையும் இணைத்து வழங்க வேண்டும்.

- Pass Book
- Staff ID Card
- Salary Slip (April 25)
- Aadhar
- PAN

ஓம்/த.முத்துமாதவன்
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (கணக்குகள்) (பொ),
தேனி

/உ.ந.உ.ப/

தலைமை உதவியாளர்